பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை (11-04-2004) தொலைபேசி - 2223378 ஒலி 114

தொலைத்தொடர்பு சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## கருணாவின் பிடியிலிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தில்

# இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம்

# தமிழீழ விடுதலைப் புலிகளின் வசம்!

## மீள்குடியமர்வுக்கும் ஏற்பாடு

(நமது மட்டக்களப்பு நிருபர்)

**விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணா அம்மானின் பிடியில் இருந்த வாகரை உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளதையடுத்து அப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களை மீளக்குடிய மர்த்தும் பணியில் மட்டு-அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறை ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்தினால் விலக்கப்பட்ட கருணாவின் பிடியில் இருந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை மீட்பதற்கு விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக கருணா குழுவில் இருந்த பலநூற்றுக்கணக்கான போராளிகள் விடுதலைப் புலிக்ளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்க

## எஞ்சியுள்ள போராளிகளை இணையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணா தொடர்ந்தும் தலைமைப் பீடத்திற்கெதிரானசெயற்பாடுகள், மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். இதற்கு உந்துதலாக தமிழ்த் தேசியத்திற்கு விரோதமான சக்திகளும் பின்புலத்தில் செயற்படுகின்றன். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கருணாவினால் இயக்க நடைமுறைக்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட குழப்பத்தை எமது தலைமைப்பீடம் இரத்தக்களரி, உயிரிழப்புக்கள் இன்றிசுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளது. ஆயினும் போராளிகள் தமது சுயவிருப்பத்தின் பேரில் வெளியேறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கருணா மோதல் யுத்தநிறுத்தத்தை மீறும் செயல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவ்வியக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட கருணா குழுவினருக்கும் இடையே இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இடம் பெற்றுவரும் மோதல் சம்பவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமித பெரேரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிதி மோசடி குறித்து வருவாய் பகுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பெயரைப பயன்படுத்தி நிதிமோசடிகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து குடாநாட்டு மக்களை விழிப்பாக இருக்குமாறு தமிழீழ வருவாய்ப் பகுதிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிவித்தலில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல் எம்.பிக்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக 11பேர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது பெயர் விபரம் வருமாறு:

கேஹன் சொக்ஸி, பேராசிரியர் ஜீஎல் பீரிஸ், நவீன்திஸ்ஸ நாயக்க, எம்.எஸ். செல்லச்சாமி, வி.புத்திர சிகாமணி, ரி.இராதாக்கிருஷ்ணன், அலிஷாகிர் மௌலான, அப்துல் ஷாகீப் ஹமால்தீன் இஸ்மாயில் முகமத் குத்தூஸ், டபிள்யு. ரி. எஸ்.புஸ்ப குமார ஹூசைன் அகமத் பைலா (ம-121)

## ஐ.ம.சு. முன்னணி அரசின் புதிய அமைச்சரவை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் 31 அமைச்சர்களும் 19 பிரதி அமைச்சர்களும் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் நேற்று மாலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த எவரும் அமைச்சர்களாக நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவில்லை. சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர்களின் பெயா விபரம் வருமாறு:-

1. பெருந்தெருக்கள் அமைச்சர்-பிரதமர் மகிந்த ராஜபக்ஷ
2. கைத்தொழில், சுற்றுலா, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்-அநுரா பண்டாரநாயக்க
3. தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர்-டி.எம்.ஜெயரத்ன
4. பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்-அமரசிறி தொடாங்கொட
5. சுகாதார நலன் மற்றும் போஷாக்கு அமைச்சர்-நிமால் சிறீபால டி சில்வா
6. விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுக அமைச்சர்-மங்கள சமரவீர
7. சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர்-ஏ.எச்.எம்.பௌசி
8. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்
9. வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சர்-ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே
10. ஆற்றுவள அபிவிருத்தி, ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர்-மைத்திரிபால சிறிசேன
11. நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனிவிரத்ன
12. மகளிர் அபிவிருத்தி மற்றும் சமூக நல அமைச்சர் சுமேத ஜெயசேன
13. நிதி அமைச்சர் - சரத் அமுனுகம
14. கிறிஸ்தவ மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் - மில்றோய் பெர்ணான்டோ
15. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் - ஜீவன் குமாரதுங்க
16. சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் - பவித்திரா வன்னியராச்சி
17. பெருந் தோட்டத்துறை அமைச்சர் - அனுர பிரியதர்சன யாப்பா
18. சுதேச மருத்துவ அமைச்சர் - திஸ்ஸ கரலியத்த
19. நகர அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக அமைச்சர் - தினேஷ் குணவர்த்தன
20. விவசாய, சந்தை அபிவிருத்தி, இந்து விவகாரம், தமிழ் மொழி பாடசாலை மற்றும் தொழிற் பயிற்சி வடக்கு அமைச்சர் - டக்ளஸ் தேவானந்தா
21. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் - பேரியல் அஷ்ரப்
22. சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் - சுசில் பிரேம்ஜெயந்த
23. தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் - அதாவுட செனிவிரத்ன
24. பிராந்திய உட்கட்டமைப்பு அமைச்சர் - ஆர்.எம்.எஸ்.பி. நாவின்ன
25. திறமை அபிவிருத்தி தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் - பியசேன கமகே
26. மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சர் - ஜனக பண்டார தென்னக்கோன்
27. போக்குவரத்து அமைச்சர் - பீலிக்ஸ் பெரேரா
28. தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் - சி.பி.ரட்னாயக்க
29. கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் - ஏ.எல்.எம்.அதாவுல்லா
30. தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் - றெஜினோல்ட் கூரே
31. விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் திஸ்ஸ விதாரன (ம-121)

மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை
SALE SALE SALE
புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
உங்களுக்காகவே விசேடமாகத் தருவிக்கப்பட்ட நவீன பாணியிலான ஆடைத்தினுசுகள், அனைத்தையும் உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திட நாடுங்கள்
புதிய ராசீ சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம். 021 222 5573
021 222 5571
நல்லி சில்க்ஸ்
121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொதுத் தேர்தல் செலவினம் 700 மில்லியன் என மதிப்பீடு

(கொழும்பு)

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற 13ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தலிற்கான செலவினம் 700மில்லியன் ரூபா என தேர்தல் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக தேர்தல் செலவினம் மதிப்பீடு செய்யப்படாத போதிலும் தேர்தல் செலவினம் 700மில்லியன் ரூபா என செலவுத் தலைப்புகளின் மூலம் தெரியவருவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும் பொதுத் தேர்தலின் செலவினம் குறித்து எதிர்வரும் ஜூலைமாத இறுதியில் உத்தியோகபூர்வ தகவலை வெளியிட முடியும் என்றும் அந்த திணைக்களம் கூறுகின்றது. (உ)

## மரதன் ஓட்டம்

அராலி மத்திஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று காலை 6.00 மணிக்கு 20 கிலோமீற்றர் தூர மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், மோட்டார் சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.(த-49)

# மோசடிகளில் ஈடுபட்ட 78 முகவர் நிலையங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி மக்களிடம் மோசடிகளில் ஈடுபட்ட 78 முகவர் நிலையங்கள் கடந்த ஒருவருட காலத்தில் சுற்றி வளைக்கப்பட்டுச் சோதனை இடப்பட்டன.

இச்சுற்றிவளைப்புகளின் போது சுமார் ஆயிரத்து 500க்கும் அதிகமான மோசடிக் கடவுச்சீட்டுக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட முகவர் நிலையங்களில் அதிகமானவை தொலைத்தொடர்பு நிலையங்கள் போல் செயல்பட்டு வந்தன. இவை நுவரெலியா, மாத்தளை, மாத்தறை,ஹம்பாந்தோட்ட,நாவலப்பிட்டிய, நீர்கொழும்பு போன்ற இடங்களில் இயங்கிவந்தன.(தி-63)

# மதுபான விற்பனை நிலையம் முற்றுகை

(கொழும்பு)

ஆயுர்வேத மருந்தகம் என்ற பெயரில் இயங்கிவந்த சட்டவிரோத மதுபான நிலையம் ஒன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்து 8 லட்சம் ரூபா பெறுமதியான மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றியுள்ளதுடன், மருந்தக உரிமையாளரையும் கைதுசெய்துள்ளனர்.

குருநாகலில் உள்ள இந்த மருந்தகத்தில் இருந்து 'அரிஸ்டர்' என்னும் போலி லேபல்கள் ஒட்டப்பட்ட ஆயிரக்கணக்கான சாராயப் போத்தல்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டமை தொடர்பாக மருந்தக உரிமையாளர் மீது பொலிஸார் விசாரணை நடத்தியதாகத் தெரியவந்துள்ளது.

நீண்டகாலமாக இந்நடவடிகையில் மருந்தக உரிமையாளர்கள் ஈடுபட்டிருந்ததாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (உ-10)

## அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் நிறைவு நாளான நாளை திங்கட்கிழமை பிப 3.00 மணி தொடக்கம் விசேட பொங்கல் அபிஷேக ஆராதனை சகஸ்ர நாம அர்ச்சனை இடம்பெற்று அம்பாள் திருவீதி உலாவும் இடம்பெறவுள்ளது.(உ)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

அராலி மத்தி-வண்ணபுரம் ஸ்ரீவிசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாதேஸவரர் தேவஸ்தான வழிபடுவோர் சபையின் 25 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் செ.சுப்பிரமணியம்தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும். (தி-49)

## நூல் வெளியீடு

(பொன்னாலை)

அருட்தந்தை பெஞ்ஜமின் ஜெயராசா எழுதிய "பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும்" என்னும் நூால் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு மண்டபத்தில் தென்னிந்திய் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-49)

## வ.பி.போ.சபைக்கு புதிய முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளராக தற்போது பிராந்தியக் கணக்காளராக கடமையாற்றும் கே.கணேசபிள்ளை நியமனம் பெறவுள்ளார்.

தற்போதைய முகாமையாளரான சு.மாணிக்கவாசகம் இளைப்பாறவுள்ளதையடுத்தே மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.(உ)

## ஆண்டு நிறைவு விழா

(கொய்யாத் தோட்டம்)

யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம் மற்றும் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 39 ஆவது ஆண்டு விழாவும் ஈஸ்ரர் நிகழ்வும் இன்று காலை 10.00 மணிக்கு மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் லிகோறி நிர்மலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் கிறிக்கெற் மற்றும் உதைபந்தாட்ட போட்டி என்பனவும மின்னொளியில் கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் நடைபெறும்.

திங்கட்கிழமை காலை 6.30 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மரதன் ஓட்டம், சிறுவர் விளையாட்டுகள் என்பன நடைபெறும். இரவு நிகழ்சியாக சாரங்கா இசைக் குழுவினரின் இன்னிசை கானங்கள் நடைபெறும். (த-31)


சங்குநாதம்




13வது பாராளுமன்ற பொதுத்தேர்தல்

டொறிங்ரன்

தமிழன் என்ற பெயரால் தூக்கி எறியப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர்

கோவையூர் ஜெயன்

கே.வி. குணசேகரம் எழுதும்

கல் தூண்கள்

ஆலடி மாநாடு

வியாசர் பதில்கள்

சின்மாசத்தியங்கள்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா: 16.00


5x15


# தென் இந்திய நடனக் கலைஞர்களின் நடன சங்கமமும், நடன பயிற்சியும்

பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகியவற்றை சென்னையை தளமாகக் கொண்ட உலகப்புகழ்பெற்ற தென் இந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாட்களிற்கு யாழ். மண்ணில் நடாத்த உள்ளோம். (04.05.2004-10.05.2004) வரை மேற்படி நிகழ்ச்சியானது நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் பயின்றவர்களும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாஷேத்திரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சிநிலையம் முதலிய பள்ளிகளூடாக கற்றுத் தேர்ந்த விற்பன்னர்களாகவும் சிறந்த ஆற்றுகையாளர்களும் உள்ள உலகப்புகழ்பெற்ற அலமேலுவும், உஷாவசந்தகுமார், உண்ணி கிருஸ்ணன் பரதநாட்டியமும், ராஜேஸ், லக்ஸ்மி பிரியா குச்சுப்புடி, ஸ்ரீபாலசுப்பிரமணியம் கதகளி ஆகியோரும் அவர்களது நடனக் குழுவினர் இந் நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்க உள்ளார்கள். இந்த ஏழு நாள் நடனப் பயிற்சியில் (பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேர விரும்பும் மாணவர்கள் 20.04.2004 செவ்வாய் கிழமைக்கு முன்னர் பதிவு செய்யவும்.

பதிவு செய்யவேண்டிய முகவரி:-

## ரி.கே.ரூறிஸ்ற் இன்

பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி) யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:- 077 6143541, 021 222 5680


2/2459

# பிரதமர் நியமனத்தில் அதிருப்தி

# ஸ்ரீ.சு.க. - ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகும்?

## அரசியல் ஆய்வாளர்கள் ஆருடம்

(கிளிநொச்சி)

**புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அதிலும் குறிப்பாக பண்டாரநாயக்கா குடும்பத்தின் வாரிசு அரசியலின் தொடர்ச்சியை அறுத்துவிடுவார் என்ற அச்சம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

**இதனை ஜனாதிபதி ஏற்கனவே அறிந்திருந்தாலும், தனது கட்சியின் உள் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வற்புறுத்தல்கள், அழுத்தங்களைத் தட்டிக்கழிக்க முடியாத நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவியை வழங்கியிருக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கு ஜே.வி.பியினரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ள அரசியல் ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜே.வி.பியின் கோட்டையாக இருக்கும் பிரதேசத்தில் ஒரு முடிசூடா மன்னனாக இருப்பவர் மகிந்த ராஜபக்ஷ என்பதால், தனது எழுச்சிக்கு ராஜபக்ஷ தடையாக இருப்பார் என அவர்கள் எண்ணினார்கள்.

மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒப்பீட்டளவில் இடதுசாரிக் கொள்கையுடையவர் என நம்பப்படுவதால், அவரது எழுச்சி ஜே.வி.பியினரின் பிரதேசத்தில் பலமடைந்துவிடும் என அச்சம் அடைந்தார்கள். அவ்வாறு மகிந்த ராஜபக்ஷ பலமடைந்துவிட்டால், தமது கட்சி பலவீனம் அடைந்துவிடும் என நினைத்த ஜே.வி.பியினர் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகி தமது பிரதேசங்களை ஆக்கிரமிப்பதை எவ்வாறாயினும் தடுத்துவிடவேண்டும் என எண்ணினார்கள். மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றதை எதிர்த்தார்கள்.

இதேசமயம், சிறுபான்மை இனத்தவர்கள் என்ற வகையில் பொம்மையாக இருக்கும் லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராகப் பதவியேற்க ஜே.வி.பியினர் விரும்பினார்கள். அவ்வாறு கதிர்காமர் பிரதமராக வந்திருந்தால், ஜே.வி.பியினருக்குச் சவாலாக இருக்க மாட்டார் என்பதை அந்தக் கட்சியில் உள்ள அங்கத்தவர்கள் அறிந்திருந்தமையினாலேயே கதிர்காமரைப் பிரதமராக்க முனைந்தார்கள்.

இதற்கிடையில் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராகப் பதவியேற்றிருந்தாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் குடும்பத்தின் வாரிசு அரசியலின் தொடர்ச்சியை அறுத்துவிடும் அபாயம் இருந்திருக்காது.

ஆனால், ஜே.வி.பியின் இந்த தந்திரோபாயங்களையும், ஜனாதிபதியின் சந்தேகத்தையும் முறியடிக்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கவேண்டும் என அடம்பிடித்தனர்.

தனது கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிவிடுத்த வேண்டுகோளை நிராகரிக்க முடியாத சூழ்நிலையும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இதனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க இணக்கம் தெரிவித்தார்.

இதேசமயம், புதிய பிரதமராகும் மகிந்த ராஜபக்ஷ பதவியேற்பதை ஐக்கியதேசியக் கட்சியும் ஏற்றுக்கொண்டது.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமாகிய ரணில் விக்கிரமசிங்க கண்டியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது, நாங்கள் இனி மோதவேண்டியது ஜே.வி.பியுடன்தான் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதேநேரம் இந்தஉரைமூலம் அவர் ஜே.வி.பியின்மீது எத்தகைய அளவிற்கு வெறுப்படைந்திருக்கின்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஜே.வி.பியினர் இணைந்துகொள்வதைக் கடுமையாக விமர்சித்தும் இருந்தார்.

இதற்கிடையில் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றிருப்பதால், ஜே.வி.பியினருக்கும், ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி பிளவுபடும் அபாயமும் இருக்கின்றது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் பெரும் வெற்றியடையவில்லை. ஆனால், ஜே.வி.பியின் வேட்பாளர்கள் பலர் விருப்புவாக்குகள் மூலம் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

இதனால், ஜே.வி.பியின் செல்வாக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது.

ஜே.வி.பியின் இந்த வளர்ச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேசமயம், ஜனாதிபதி சந்திரிகா தனது கட்சியை ஜே.வி.பியினரிடமிருந்து காப்பாற்றுவதற்காகவும் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்க இணங்கியிருப்பார்.

இது ஒருபுறம் இருக்க புதிதாகப் பதவியேற்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பொருளாதார செய்பாட்டிலும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் சர்வதேச நாடுகள் உதவேண்டும் எனவும் கோரியிருந்தார்.

ஆனால், சர்வதேச நாடுகளோ சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதிலேயே தமது நிதியுதவிகள் கிடைக்கும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

இதனால், புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் உதவியைத் தற்போது நாடியுள்ளார். இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இந்தியாவோ பிரதமரின் இந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்.

இலங்கைப் பிரச்சினையில் நேரடியாக தலையிட்ட இந்தியா கடந்த காலங்களில் தமக்கு நிகழ்ந்த கசப்பான சம்பவங்களைப் புரட்டிப்பார்த்துக் கொண்டிருப்பதே இந்தியாவின் இந்த மறுப்புக்கு முக்கிய காரணமாகும்.

ஆனாலும், பிரதமரோ இந்தியாவை விட்டுத் துரத்துகிறார். அவர் விரைவில் இந்தியா செல்லவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியா செல்லும் பிரதமர் அங்கு சமாதானத்தைப் பற்றிப் பேசுவாரோ அல்லது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது பற்றிப் பேசுவாரோ என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சர்வதேச நாடுகளின் வேண்டுகோளுக்கு அமைய சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துச் செல்வாராயினும், பல்வேறு சவால்களை எதிர்கொள்வார் என்பது உறுதி.

ஜே.வி.பி. உட்படப் பல கட்சிகளைக் கூட்டிணைந்து ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளை மட்டும் அழைத்துக்கொள்வது, சகல சிறுபான்மைக் கட்சிகளையும் அழைத்துப் பேச வேண்டும் என்கின்றது ஜே.வி.பி.

அத்துடன், இடைக்கால நிர்வாக சபையைக் கொடுக்கக் கூடாது என்றும், இடைக்கால நிர்வாகசபை நாட்டைத் துண்டாட வைத்துவிடும் என்றும் ஜே.வி.பி. கூறிவருகின்றது.

ஜே.வி.பியின் இந்த நிபந்தனைகளுக்குப் பக்கபலமாக ஜாதிக ஹெல உறுமயவும் சில நிபந்தனைகளை விதித்திருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் தமது கட்சியும் பங்குபற்றவேண்டும் என்றும், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆலோசிக்கப்படும் போது அது பற்றித் தமக்கும் தெரியப்படுத்தி தமது ஆலோசனைகளையும் பெறவேண்டும் எனவும் கேட்டுள்ளது.

அவ்வாறு இல்லையானால், அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தாம் குழப்பப்போவதாகவும் எச்சரித்துள்ளது.

இதற்கமைய நெருக்கடியான நிலையில் இருந்து அரசு மீள வேண்டுமானால், சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் அரசு தம்மைத் தாமே பலப்படுத்திக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடரலாம்.

அவ்வாறு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறாமல் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.ஆகியவிற்றின் ஆதரவைப் பெற்று அரசு பலம்பெறுமானால், சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடும்.

அவ்வாறு சமாதானம் விலகிப் போகும்போது சர்வதேச நாடுகளின் நிதியுதவியும் கிடைக்காமல் போகும் என்பது திண்ணம்.

அத்துடன், சர்வதேச நாடுகளின் உதவியை இழக்கும் அரசு, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது தத்தளிக்கும்.

இதன் காரணமாக மீண்டும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதுடன், அரசுக்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் இறங்கி விடுவார்கள்.

இதன்விளைவாக பதவியேற்றவர்கள் எல்லோரும் பதவிகளைப் பறிகொடுத்துவிட்டுச் செல்லும் வகையில்மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறலாம்.

(உ-60,10)

---

யாழ்ப்பாணம் **ஆ.வேலுப்பிள்ளை & சன்ஸ்** ஆதரவுடன்

## வலம்புரி-சங்குநாதம் நடத்திய பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004

## கருத்துக்கணிப்பு முடிவுகள்

**வினாக்கள்**

- 13வது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கும் கட்சி எது?
- யாழ். மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சி, சுயேட்சை ரீதியாக?
- யாழ். மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரின் பெயர்கள்?

மூன்று வினாக்களுக்குமான கருத்துக்கணிப்பில் சரியான பதிலைத்தந்து (9 உறுப்பினர்களின் பெயர் விபரங்களில் 8பேரின் பெயர்கள் சரியானவை)

**முதல் பரிசைப் பெறுபவர்**

**இரத்தினம் ரமணி**
வவுனில் அல்வாய் மேற்கு, அல்வாய்,

**இரண்டாம் பரிசு (இருவருக்கு)**

(9 உறுப்பினர்களின் பெயர் விபரங்களில் 7 பேரின் பெயர் சரியானவை)

**கிருஷ்ணபிள்ளை அன்ரனிதாஸ்**
கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை

**தி. மாணிக்கவாசகர்**
உசனை வளவு, தும்பளை, பருத்தித்துறை

**பாராட்டுப்பெறுவோர்**

13ஆவது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கும் கடசி எது? சரியான கணிப்பைத் தெரிவித்து பாராட்டுப்பெறுவோர்

**செல்வன் ரி.எஸ்.சயந்தன்**
அரசடி வீதி, வட்டுக்கோட்டை.

**கே.அரசேஸ்வரன்**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**முருகேசு முத்துக்குமாரு**
7ம் வட்டாரம், புங்குடுதீவு.

**கில்டா தர்ஷிக்கா ஆனந்தராஜா 'பிறேமஸ்ரன்'**
நெல்லியடி, கரவெட்டி

**தி.நடராசா**
12, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பலவாணர் பாலச்சந்திரன்**
கொட்டாவத்தை கல்வளை, சண்டிலிப்பாய்.

**ஆறுமுகசாமி கஜேந்திரன்**
42, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.

**முருகுப்பிள்ளை இரத்தினம்**
வவுனில் அல்வாய் மேற்கு, அல்வாய்

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சி, சுயேட்சை ரீதியாக சரியான கருத்தைத் தெரிவித்து பாராட்டுப்பெறுவோர்

**திருமதி ஏ.சர்மிளா**
இல. 620, நாவலர்றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

**கந்தையா இரத்தினம்**
'மலர் வாசம்' அளவெட்டி.

**நாகமணி மகேந்திரலிங்கம்**
பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்.

**முருகேசு செல்வராசா**
காளி கோவிலடி, தாவடி தெற்கு

**பெனடிக்ற் இராசநாயகம் அமலநாயகம்**
256A காரைநகர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் 8 பேரின் பெயரைச் சரியாகக் கணித்துப் பாராட்டுப் பெறுவோர்

**ஞானசுந்தரம் ஐங்கரன்**
இல. 28, மெமோறியல் லேன், மானிப்பாய்.

**கடாட்சம் அனுஷன்**
114, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**திருக்குமார் சரூபன்**
'சக்தி வாசம்', இணுவில் கிழக்கு.

**நடராஜா கலைச்செல்வி**
67/3 தர்மலிங்கம் அவனியு, சீனிவாசம் வீதி, கொட்டடி யாழ்.

**ஆறுமுகசாமி நந்தினி**
இல. 42, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.

**இரத்தினம் ரமேஷன்**
அல்வாய் மேற்கு, அல்வாய்

**குறிப்பு:- 1ஆம், 2ஆம் இடத்தைப் பெற்றவர்களுக்கான பரிசுகள் கவிதைப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வில் வழங்கப்படும்.**

நிர்வாகம்

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி. பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

100

## ஐந்தாம் பகுதி

## இஸ்லாமியரின் சட்டம்

## 1. இலங்கையில் முஸ்லிம்கள்: சில வரலாற்றுக் குறிப்புகள்

முற்காலங்களிற் போல இந்திய - இலங்கை வர்த்தகத்திற் பாக்கும் துணிவகைகளும் முதலிடம் பெற்றன. அவற்றின் ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரம் பெரும்பான்மையும் முஸ்லிம்களின் வசமாகவே இருந்தது. ஒல்லாந்தர் காலியைக் கைப்பற்றியிருந்த காலத்தில், முஸ்லிம்கள் அப்பகுதியில் விற்பனையாகிய கறுவாவைக் கொள்வனவு செய்தனரென்று கூறப்படுகின்றது. வேருவலை, மக்கோன, அலுத்கம ஆகிய கரையோரப் பட்டினங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்தின் பகுதிகளுக்குச் சென்று வியாபாரஞ் செய்தனர். வன்னி நாட்டின் மூலமும் யாழ்ப்பாணத் துறைமுகங்களின் ஊடாகவும் கண்டி இராச்சியம் தென்னிந்தியப் பிரதேசங்களோடு வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தி லிருந்த முஸ்லிம் வியாபாரிகள் சிலர் கண்டியின் வர்த்தகத்திற் பங்கு பற்றினார்கள் யாழ்ப்பாணத் திற் பொதிமாடுகளுடன் சென்று வியாபாரஞ் செய்யும் முஸ்லிம்களுக்கு வரிச்சலுகை வழங்க வேண்டுமென்று கண்டிப் பிரதானி ஒருவன் 1699இல் யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தருக்குக் கடிதம் எழுதியிருந்தான்.

18 ஆம் நூற்றாண்டிலே இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம்கள் வியாபாரஞ் செய்தனர். சில சமயங்களில் அவர்கள் கண்டிப் பிரதானிகளோடும் ஒல்லாந்த அதிகாரிகளோடும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். அபூபக்கர் பிள்ளை என்ற வியாபாரியிடமிருந்து 300 அமணம் பாக்கினை ஒல்லாந்த அதிகாரிகள் 1743 ஆம் வருடத்திலே ஒருசமயத்திற் பறிமுதல் செய்திருந்தனர். மூன்று கோறளை, நான்கு கோறளை, தும்பற ஆகியவற்றின் திசாவை அந்தப் பொருள் தனக்குரியதென்றும், அதனை வியாபாரியிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றுங் கேட்டுக் கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு விண்ணப்பஞ் செய்தான். மாத்தறைத் துறைமுகத்தில் 1759 ஆம் ஆண்டில் 105 சம்மான்கள் காணப்பட்டன. அவை நெல்லை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் 30 முதல் 50 அமணம் வரையான நெல்லை ஏற்றலாம். அவற்றின் உடைமைக்காரரிற் பலர் முஸலிமகளாவர். முசலிபத்திலும் அநுராதபுரத்திலும் வாழ்ந்த முஸ்லிம்கள் மன்னாரிலே கொம்பனிக்குத் தேவையான மிளகினை விநியோகிப்பதற்கு 1790 - 1800 ஆகிய காலத்தில் உடன்பட்டனர்.

கப்பல்களின் சொந்தக்காரரான முஸ்லிம்கள் சிலரைப் பற்றிய குறிப்புகள் ஒல்லாந்தரின் ஆவ்ணங்களில் உள்ளன. சேகு மீறா லெவ்வை பகீர் தம்பி என்பவருக்குச் சொந்தமான கப்பலொன்றிலே 1791 இல் ஒல்லாந்தர் கொழும்பிலிருந்து மன்னாருக்கு சாராயத்தை அனுப்பி வைத்தார்கள். அதே வருடத்திலே சின்னப்பிள்ளை மரிக்கார் என்பவருடைய கப்பல் ஒல்லாந்தருடைய ஆவணங்கள் சிலவற்றை ஏற்றிச் சென்றது. 1792இல் லெவ்வை தம்பி மரிக்காரின் கப்பலிற் கொழும்பிலிருந்து ஆட்சியாளர் புடைவைகளை மன்னாருக்கு அனுப்பினார்கள். யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தாரின் விண்ணப்பத்தின் பேரில் 10,000 இறைசால் பணத்தை யாழ்ப்பாணத்து முகம்மது நயினாலெவ்வை என்பாருக்குக், கொடுப்பதற்குக் கொழும்பில் இருந்த ஒல்லாந்த அதிகாரிகள் உடன்பட்டனர்.

வர்த்தகத்திற் பல கட்டுப்பாடுகளை ஒல்லாந்தர் ஏற்படுத்தியதன் விளைவாகக் கள்ளக்கடத்தல் வியாபாரம் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகரித்தது. முஸ்லிம்களும் செட்டியார்களும் அதிலே ஈடுபட்டனர். இலங்கையில் இருந்து பாக்கினையும் வாசனைச் சரக்குகளையுங் கடத்திச் சென்றதோடு இந்தியக் கரையோரங்களிலிருந்து புடைவைகளையும் உலோகப்பொருட்களையும் இலங்கைக்குக் கடத்தினார்கள். இப்பொருட்களை இலகுவில் விற்க முடிந்ததால் அவற்றின் கடத்தல் வியாபாரம் மூலமாக அதிக இலாபங் கிடைத்தது. புத்தளம், மன்னார் ஆகியவற்றுக்கிடையான கரையோரம் வழியாகவே கடத்தல் வியாபாரம் கூடுதலாக நடைபெற்றது. கி.பி.1766 வரை இக் கரையோரப்பகுதி கண்டி இராச்சியத்திற்கு உரியதாகவிருந்தது. மலைப்பிரதேசங்களிலிருந்தும் வியாபாரிகள் அங்குள்ள பொருள்களைப் புத்தளம் பகுதிக்கு ஏற்றிச் சென்றார்கள். அங்கிருந்து ஆற்றுவழியாக அவை கரையோரத்திற்குக் கொண்டுசெல்லப்படும். கடத்தற்காரர் பின்பு அவற்றை சிறிய மரக்கலங்களில் ஏற்றிக் கொண்டு கடல் வழியாகச் சேதுபதியின் கரையோரத்திற்குப் போவது வழக்கம். வடகிழக்குக் கரையோரம் மூலமாகவும் இவ்வாறான கள்ளக்கடத்தல் வியாபாரம் நடைபெற்றது. கண்டிப் பிரதானிகளிற் சிலரும் இதிற் பங்குகொண்டிருந்தனர்.

தையல்வேலை, சப்பாத்துச்செய்தல் என்னுந் தொழில்களிலும் முஸ்லிம்கள் சிலர் ஈடுபட்டனர். 1650ஆம் ஆண்டிலே படைகளுக்குத் தேவையான உடுபுடைவைகளைத் தைப்பதற்குக் கொம்பஞ்ஞீய முஸ்லிம்களை ஈடுபடுத்தியது. அத் தையற்காரர் கணிசமான அளவு ஊதியம் பெற்றனர். கொழும்பிலே வசிப்பதற்குப் 16 முஸ்லிம் தையற்காரருக்குத் தான் அனுமதி வழங்கியிருந்ததாக 1663இல் பான் கூன்ஸ்(**Van Goens**) குறிப்பிட்டுள்ளார்.

கொம்பஞ்ஞீயவின் அரசாங்கமானது முஸ்லிம்கள் சிலருக்கு மரபு வழியான நிர்வாகப்பதவிகளையும் பட்டங்களையும் வழங்கியது. முஸ்லிம் சமூகத்தவரோடு தொடர்புகளை வைத்திருப்பதற்கு அரசாங்கமானது அவர்களின் தலைமைக்காரராக முஸ்லிம்களை நியமிக்க வேண்டியிருந்து. தேசாதிபதி ஸைமன்ஸின் காலத்திலே, கொழும்பிற் கோட்டைக்குச் சமீபமாயுள்ள பகுதியிலே குடியிருப்பதற்கு முஸ்லிம்கள், செட்டிகள், பரவர் ஆகியோருக்குத் தனியாக நிலங்கள் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு சமூகத்தினருக்குந் தனித்தனியான தலைமைக்காரரும் நியமிக்கப்பட்டனர். உதுமான் கண்டு மைஸ்திரி ஐத்துரூஸ்லெவ்வை மரிக்கார் என்பவன் 1762ஆம் ஆண்டிலே கொழும்பில் உள்ள முஸ்லிம்களின் தலைமைக்காரனாக நியமனம் பெற்றிருந்தான். கொம்பஞ்ஞீயவின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிற் காலி, மாத்தறை போன்ற இடங்களிலும் அத்தகைய ஏற்பாடுகள் காணப்பட்டன. சின்னலெவ்வை மரைக்காயர் செக்காதி லெவ்வை என்பானொருவன் 1789இல் மாத்தறையிலே முஸ்லிம்களின் தலைமைக்காரனாக இருந்தான். முஸ்லிம்கள் செய்யவேண்டிய ஊழியத்தை ஒழுங்குபடுத்துவது அவனுடைய கடமையாகும். யாழ்ப்பாணத்திலே கொம்மாந்தாரின் காரியாலயத்திலே கடமை புரிவதற்குத் தொலுக்கு என்னும் பதவி 1793ஆம் ஆண்டிலே முஸ்லிம் ஒருவனுக்கு வழங்கப்பெற்றது.

ஆட்சியாளர் சில வருமானங்களைத் தாமாகவே வசூலித்துக்கொள்ள விரும்பவில்லை. அவற்றைச் சேர்க்கும் உரிமையினைக் குத்தகையாளரிடம் ஏலத்தில் விற்பனை செய்தனர். 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து முஸ்லிம்கள் பலர் குத்தகையாளராகக் காணப்பட்டனர். குடியானவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வரியாகக் கிடைக்க வேண்டிய பாக்கினைச் சேர்ப்பதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். கண்டி நாட்டில் இருந்து முஸ்லிம்கள் பாக்கினை ஏற்றிச் சென்று கொம்பஞ்ஞீயவிற்கு வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. புடவைகள், மீன், நெல் இரத்தினக்கற் சுரங்கங்கள், கள், சாராயம் முதலியன தொடர்பான குத்தகைகளும் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன. அவற்றிலே சில சமயங்களில் அவர்கள் பறங்கியர் ,செட்டிகள், சிங்களவர் ஆகியோருடன் பங்காளிகளாயும் இருந்தனர்.(*தொடரும்*)

## மக்களின் சுமைகளை நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசினால் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நீக்கவேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி அறிக்கை ஒன்றினையும் விடுத்துளளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்தல், அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், சமுர்த்தி நிவாரணம் போன்றவை வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், வற்வரியை நீக்கி, உரவகைகளுக்கான மானியத்தை வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும்.

இவை யாவும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கொண்டாடப் படவுள்ள மேதினத்திற்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-63)

## படையினரின் ஏற்பாட்டில் புத்தாண்டு நிகழ்ச்சிகள்

(பலாலி)

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு 513வது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியின் ஆலோசனைக்கமைய, 2வது புலனாய்வு இராணுவப் பிரிவு 19வது இலங்கைப் பாதுகாப்பு இராணுவப் பிரிவு, 513வது படைப்பிரிவு அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட புதுவருட நிகழ்ச்சி மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழனன்று காலை 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரைக்கும் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்தப் புதுவருட நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இங்கு இராணுவத்தினருக்கு கயிறு இழுத்தல், யானைக்கு கண் வைத்தல், தடை தாண்டி ஓடுதல், வினோத உடை, சறுக்குக் கம்பத்தில் ஏறுதல், முட்டி உடைத்தல், சிறந்த வீடு தெரிவு செய்தல் போன்ற போட்டிகளும் பாடசாலை மாணவர்களுக்காக பணிஸ் சாப்பிடுதல், மெதுவாக சைக்கிள் செலுத்துதல், அஞ்சலோட்டம், சங்கீதக் கதிரை போன்ற போட்டிகளும் நடாத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர்களாக 514வது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி, 513வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, உடுவில் கிறிஸ்தவ ஆலய தந்தையான ஆணோல்ட், வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் மாணிக்கவாசகர், பாடசாலை உப அதிபரான எஸ். சண்முகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.








## ஈராக்கில் தாக்குதல் அதிகரிப்பு

# சதாமின் ஆதரவுப் படைகள் இரு நகர்களைக் கைப்பற்றின

(பக்தாத்)

ஈராக்கில் பல்வேறு நகரங்களில் அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டு ராணுவப்படைகள மீது கடந்த சில நாட்களாகத் தாக



குதல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. குட்,நஜ.ஃப் ஆகிய நகரங்களின் மீதான கட்டுப்பாட்டை எதிர்ப்பாளர்களிடம் இழந்துவிட்டதாக அமெரிக்க மூத்த இராணுவ அதிகாரி லெப் ஜெனரல் ரிகார்டோ சஞ்சஸ் வெள்ளிக்கிழமை பக்தாத்தில ஒப்புக் கொண்டார். முக்ததா அல் சாதா தலைமையிலான அல்-மாஹ்தி என்ற தீவிரவாதக் குழுதான தாக்குதலைத் தீவிரமாக நடத்துகிறது என்று அவர் சொன்னார.

தலைநகர் பக்தாத், பலூஜா, சாதர்,குட்,கர்வலா,நசாப்,கு.ஃபா போன்ற பல நகரங்களிலும் கடும் சண்டை நடக்கிறது. சதாமின் ஆதரவாளர்கள் இயந்திரத துப்பாக்கிகளையும் கையெறி குண்டுகளையும் ரொக்கட் குண்டுகளையும் சில இடங்களில் பீரங்கிகளையுமு தாராளமாகப் பயன்டுத்துகின்றனர். கடந்த சில நாட்களில் மட்டும் இச் சண்டையில் 400க்கும் மேற்பட்டோர் இறநது விட்டதாகவும ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்காயமடைந்துள்ளதாகவும் அல்-ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் தெரிவிக்கிறது.

சன்னி பிரிவு முஸ்லிமகளின் கோபத்தை தணிக்க 24மணிநேரத்திற்குப் போர் நிறுத்தம் செய்வதாக அமொிக்க சிவில் நிர்வாகி போல் பிரேமர் அறிவித்தார். ஆனால அது 90 நிமிடங்கள் தான் நீடித்தது என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர். பெண்களும் குழந்தைகளும உணவு, குடிநீர்,மருந்து ஆகியவற்றைப் பெறுவதற்காக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

பலூஜா நகரில் கைவிடப்பட்ட பல ஆலைகளில அமெரிக்கத துருப்புக்கள் தங்கியுள்ளன. நிலைமை கட்டுமீறி வருவதால் வீடு வீடாகப் புகுந்து சந்தேகப்படுபவர்களை கைது செய்வோம அல்லது தாக்குவோம் என்று அமெரிக்க இராணுவம் அறிவித்ததை அடுத்து நகரில் பதற்றம ஏற்பட்டது. பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பான இடம் தேடி நகரை காலி,செய்கின்றனர்.

பக்தாத்துக்கு மேற்கிலுள்ள அபுகரீப் என்ற இடத்தில் துருப்புக்களுக்கும் சதாம் ஆதரவாளர்களுக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை நடப்பதை புகைப்படக்காரா ஒருவர் நேரில் பார்த்தார். அபுகரீப்புக்கும் பலூஜாவுக்கும் இடையிலான நெடும் சாலையே எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. அப் பாதையில் அமெரிக்க இராணுவத்தின் 10லொறிகளை எதிர்ப்பாளர்கள் கொளுத்திவிட்டனர். ஒரு லொறியில் டிறைவர் மட்டும் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். மறறவர்கள லொறியோடு கொளுத்தப்பட்டுவிட்டனர்

ஷியா,சன்னி ஆகிய இரு பிரிவு முஸ்லிம்களும் சேர்ந்து தாக்குகின்றனர். அவர்களுடன் பிறதீவிரவாத இயக்கங்களும் சேர்ந்து கொண்டுள்ளன என்று அமெரிக்க தரைப்படைத் தளபதி லெப் ஜென ரல் ாிகார்டே சஞ்சஸ் தெரிவிக்கிறார். இக்கூட்டுத் தாக்குதலை விரைவில் முறியடிப்போம். எங்களுடைய படைகளையும் ஆயுதங்க்ளையும் ஒன்று திரட்டி மீண்டும் கடும் தாக்குதல் நடத்தி இவர்களை ஓடவைப்போம் என்றா அவர். அமெரிக்காவின் போர் விமானங்களும் பீரங்கிகளும் தாக்குதலில் ஈடுபடுத்தப்படுகின்றன.

சதாம் ஹுசைனை அதிபர் பதவியில் இருந்து அகற்றிய ஆண்டு தினம் வெள்ளிக்கிழமை என்பதால் இச்சண்டை தீவிரமாக நடந்தது. வெளிநாட்டுப்படைகள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி 3ஜப்பானியர் உட்பட 9 வெளிநாட்டவரை கலகக்காரர்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

ஈராக்கில் போர் அல்லாத சமுகப் பணிகளைச் செய்யத்தான் ஜப்பானிய இராணுவம் வந்திருககிறது என்பதால் வெளியேற மாட்டார்கள் என்று ஜப்பானிய பிரதமர் கொய்சுமி டோக்கி யோவில அறிவிததுவிட்டார். (யே)

### மாட்டுச் சண்டைக்கு ஸ்பெயினில் தடை

காளை மட்டுச் சண்டைக்கு ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் தடை விதிக்கப்பட்டுள்ளது. விலங்குகள் உரிமை அமைப்பினின தொடர் பிரசாரத்தை அடுத்து இது தொடர்பான தீமானம் பார்சிலோனா நகராட்சி மாமனறத்தில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது. (யே)

### உறவினர் கவலை

(சான் சல்வடோர்)




ஈராக்கில் ஸ்பெயின் இராணுவத்தோடு சேர்ந்து அமைதிப் பணிகளில் ஈடுபட்டு வரும் எல் சல்வடோ இராணுவத்தை உடனே நாட்டுக்குத் திருப்பி அழைக்குமாறு அந்நாட்டு மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அநாட்டு இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரின் இறுதிக்கிரியைகளின் போது உறவினர்கள் சோகத்தில் காணப்படுகின்றனர். (யே)

### காத்மண்டுவில் கலகம்

(காத்மண்டு)

நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் நேற்று மீண்டும் பாரிய கலகம் வெடித்தது.



கலக்காரரை அடக்குவதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் கண்ணீர் புகை மற்றும் குண்டாந்தடிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது சுமார் 1000 கலகக்காரர்கள் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். (யே)



மெக்சிக்கோ மற்றும் அமெரிக்க எல்லைப்புறங்களில் போதைப்பொருள் கடத்தற்காரர்களுக்கும் மெக்சிக்கோவின் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்ட கடத்தற்காரர்களுக்கு அருகில் இராணுவ வாகனம்.

## புதிய சட்டவரைபு ஆலோசனைக் கூட்டத்திற்கு

# ஆங் சாங் சூகியின் கட்சிக்கு மியன்மார் இராணுவ அரசு அழைப்பு

(ரங்கூன்)

புதிய சட்டவரைபு குறித்து கூட்டப்பட்டுள்ள ஆலோசனை மாநாட்டுக்கு வருமாறு மியன்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங் சூகியியின் தேசிய ஜனநாயகக் கட்சிக்கு மியன்மார் இராணுவ அரசு அழைப்பு விடுத்துள்ளது. மியன்மார் இராணுவ அரசு புதிய சட்டம் இயற்ற முடிவு செய்துள்ளது. இது குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனை மாநாடு ஒன்று மே 17 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. இதில் முக்கியு எதிர்க்கட்சியான தேசிய ஜன நாயகக் கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது குறித்து தேசிய ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினர் ''தான்டன்'' வியாழக்கிழமை அறிவித்தார்.

தேசிய மாநாட்டில் பங்கேற்க எங்களுக்கு அழைப்பு வந்துள்ளது. மாநாட்டில் பங்கேற்பது குறித்து கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கூடி முடிவு செய்வர். எங்கள் தலைவர் ஆங்சாங் சூகி மற்றும் கட்சியின் மூன்று முக்கிய தலைவர்கள் இராணுவ அரசால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் எங்கள் கட்சி நடவடிக்கைகளும் நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ளன. இராணுவ ஜுன்டா அரசு கூட்டத்திற்கான அழைப்பிதழை புதன் கிழமை எங்களிடம் அளித்துள்ளது. ஆனால் இதர அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பிதழ் அனுப்படடுள்ளதா எனத் தெரியவில்லை. மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்பது குறித்து கட்சி பன்னர் அறிக்கை வெளியிடும். இருப்பினும் வீட்டுக் காவலில் வைகக்கப்பட்டுள்ள எங்கள் தலைவர்களை விடுதலை செய்யக் கோருவேம் என்றார் அவர். (யே)

## பணயக் கைதிகள் விவகாரத்தின் தாக்கத்தால்

# ஜப்பான் உள்ளிட்ட "ரைகர் றிம்" நாடுகளின் பங்குச் சந்தையில் பாரிய வழ்ச்சி


ஜப்பான் உள்ளிட்ட "ரைகர் றிம்" நாடுகள் என்று அழைக்கபபடும்



கிழக்காசியப் பொருளாதாரத்தில் முன்னிலை வகிக்கும் நாடுகளின் பங்குச்சந்தைகள் நேற்று முந்தினம் பாரியவீழ்ச்சியைக் கண்டன.

ஈராக்கில் மூன்று ஜப்பானியர் கள் பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஜப்பானிய அரசியலில் இஸ்திரமற்ற தன்மை தோன்றியுள்ளது. இதன் காரணமாக ஜப்பானின பங்குச் சந்தை பாரிய வீழச்சியைக் கண்டுள்ளது. கடந்த 32 மாதகாலமாக உயர் நிலையில்இருந்த சராசரிக் கொள் வனவு சுட்டெண் 1.6 வீதத்தால திடீா வீழ்ச்சியடைந்தது. இதன் எதிரொலிபபு தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர், ஹொங்கொங் ,இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளின் பங்குச் சந்தையில் காணப்பட்டது.

தொலைக்காட்சி சலனப் படங்களில் கைதிகள், அவா்களை பணயம் வைத்திருப்பவா்களால் தாக்கப்படும் காட்சிகள் காண்பிக்கப்படுவதைத் தொடர்ந்து முதலீட் டாளர்கள் பொதும கலக்கமடைந் துள்ளதாக ரொய்டா்செய்தி ஸ்தாபனம்செய்தி வெளியிட்டுள்ளது. ஜப்பானில இந்தப் பிரச்சினையைத்தொடர்ந்து வங்கிகள் விமான நிலையங்கள் உல்லாசப் பயணத் துறை ஆகியவற்றில் பாரிய வீழ்ச்சி ஏற்படடிருப்பதும் குறிப்பிடததக்கது. (யே)



கொலம்பியாவின் பொப்யான் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசுத்த வார ஆராதனைகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான ரோமன் கத்தோலிக்கர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இன்று உலகெங்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

# இந்தியாவுக்கு வெளியே இந்திய அணியின் வெற்றிகள்

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய அணியினர் ஒரு டெஸ்ட் போட்டியில் வென்றும், மற்றொரு போட்டியில் தோற்றும் டெஸ்ட் தொடரை சம நிலையாக்கியுள்ளனர்.

பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட் போட்டியை இனிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இந்திய அணி முதன் முதலாக பாகிஸ்தான் மண்ணில் தனது முதல் வெற்றியைப் பெற்றுள்ளது. அத்துடன் இந்தியாவுக்கு வெளியே மண்ணில் இந்திய அணி பெற்ற அபார வெற்றியாக இந்த டெஸ்ட் போட்டி கருதப் படுகின்றது.

இந்திய கிரிக்கெற் அணி இந்தியாவுக்கு வெளியே 1967 - 68 ஆம் ஆண்டில் நியூசிலாந்து அணிக்கெதிராக முதல் டெஸ்ட் போட்டியை வென்று அதன் வெற்றியை கொண்டாடியது. இந்திய அணி முல்தானில் பாகிஸ்தான் அணியை வெற்றி பெற்றதன் மூலம் இந்தியாவுக்கு வெளியே தனது 20 வது வெற்றியினைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த 20 போட்டிகளில் 7 போட்டிகளைக் கங்குலி தலைமையிலான அணி பெற்றுக்கொடுத்துள்ளது.

இந்தியாவுக்கு வெளியே இந்திய அணி பெற்ற டெஸ்ட் வெற்றிகளின் விபரம் வருமாறு,

| எதிரான நாடு | வெற்றி வித்தியாசம் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| நியூசிலாந்து | 5 விக்கெற் | டுனெடின் | 1967/68 |
| நியூசிலாந்து | 8 விக்கெற் | வெலிங்டன் | 1967/68 |
| நியூசிலாந்து | 272 ஓட்டங்கள் | ஒக்லாண்ட் | 1967/68 |
| மேற்கிந்தியா | 7 விக்கெற் | போர்ட் ஆப் ஸ்பெயின் | 1970/71 |
| இங்கிலாந்து | 4 விக்கெற் | ஓவல் | 1971 |
| நியூசிலாந்து | 8 விக்கெற் | ஒக்லாண்ட் | 1975/76 |
| மேற்கிந்தியா | 6 விக்கெற் | போர்ட் ஆப் ஸ்பெயின் | 1975/76 |
| அவுஸ்திரேலியா | 222 ஓட்டங்கள் | மெல்போர்ன் | 1977/78 |
| அவுஸ்திரேலியா | இனிங்ஸ், 2ஓட்டங்கள் | சிட்னி | 1977/78 |
| அவுஸ்திரேலியா | 59 ஓட்டங்கள் | மெல்போர்ன் | 1980/81 |
| இங்கிலாந்து | 5 விக்கெற் | லார்ட்ஸ் | 1986 |
| இங்கிலாந்து | 279 ஓட்டங்கள் | லீட்ஸ் | 1986 |
| இலங்கை | 235 ஓட்டங்கள் | காலி | 1993 |
| பங்களாதேஷ் | 9 விக்கெற் | டாக்கா | 2000/01 |
| சிம்பாப்வே | 8 விக்கெற் | புலவாயோ | 2001 |
| இலங்கை | 7 விக்கெற் | கண்டி | 2001 |
| மேற்கிந்தியா | 37 ஓட்டங்கள் | போர்ட் ஒவ் ஸ்பெயின் | 2001/02 |
| இங்கிலாந்து | இனிங்ஸ், 46ஓட்டங்கள் | லீட்ஸ் | 2002 |
| அவுஸ்திரேலியா | 4 விக்கெற் | அடிலெய்ட் | 2003/04 |
| பாகிஸ்தான் | இனிங்ஸ், 52ஓட்டங்கள் | முல்தான் | 2003/04 |

(யே-121)

# எதென்ஸ் ஒலிம்பிக்கில் கூரையற்ற நீச்சல் தடாகம்

ஏதென்ஸில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் நீச்சல் தடாகங்களின் கூரைகளை இம்முறை மூடப்போவதில்லையென அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள். ஒலிம்பிக் நடைபெறவுள்ள ஆகஸ்ட் மாதம் எதென்ஸில் கடும் வெய்யில் காணப்படும். இதன் காரணமாக நீச்சல் வீரர்கள் அவதிப்படக்கூடும். எனினும் உண்மையில் அமெரிக்க நீச்சல் வீரர்கள் வெய்யிலை விட்டப் பாதுகாப்புக் குறித்தே அதிக கவனம் கொண்டுள்ளனர்.

பல அமெரிக்க நீச்சல் வீரர்கள் தாங்கள் கூரைகள் அற்ற நீச்சல் தடாகங்கள் பற்றிக் கவலைப்படவில்லை. எனக் குறிப்பிட்டுள்ளனர். கூரை பற்றி நான் கவலையடையவில்லை என அமெரிக்காவின் பிரபல நீச்சல் வீரர் மைக்கல் பிலிப்ஸ் தெரிவித்துள்ளார். இவர் பார்ஸிலோனாவில் நடைபெற்ற உலக சம்பியன் ஷிப் போட்டியில் ஐந்து பதக்கங்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எதென்ஸ் உலகக் கிண்ணப் போட்டியில் 7 தங்கப் பதக்கங்களை இலக்கு வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனக்கு நீச்சல வீரன் என்ற வகையில் நீரும் ஏனைய போட்டியாளர்களுமே தேவையென அவர் தெரிவித்துள்ளார்.

பல்ரி மோரில் (அமெரிக்கா) தனக்கு வெய்யில் நன்கு பழக்கப் பட்ட விடயம் என்றார் மைக்கல் பிலிப்ஸ். 2000 ஆண்டு 200 மீற்றர் (பட்டர் பிறைட் சம்பியன்) மிஸ்ரி கைமன் போன்றவர்களும் இதே மாதிரியான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

இதேவேளை, இதைவிட தங்களுக்கான பாதுகாப்புப் பற்றியே அவர்க்ள் அதிக கவனம் செலுத்தும் படி வலியுறுத்தியுள்ளார்கள்.

(யே-121)

# டெனிஸ் வீராங்கனைகளின் சென்டிமென்டுகளும் ரகசியங்களும்

தங்கம் வாங்கினால் பரிசு நிச்சயம் மட்டுமா? அத்துடன் இறுதிப் போட்டியில் கட்டாயம் வெற்றி பெறுதல் என்ற வித்தியாசமான முறையைக் கடைப்பிடித்து வருகிறார் உலகின் டெனிஸ் தரப்படுத்தல் வரிசையில் முதல் இடத்தில் உள்ள டென்னிஸ் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின்.

ஹெனின் எந்த நகருக்கு போட்டியில் பங்கு பற்றச் செல்கிறாரோ அங்கு போட்டி தொடங்குவதற்கு முன்பு அந்நகரில் உள்ள பிரபல ஆபரண மாளிகைக்குச் செல்கிறார். அந்தக் கடையில் விலை உயர்ந்த ஆபரணங்களை விலைக்கு வாங்குகிறார்.

இப்படித்தான் ஒரு முறை ஜனவரி மாதம் சிட்னியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியை ஆடச் சென்ற போது அவர் அங்குள்ள பிரபல கடைக்கு ஷொப்பிங் சென்று தங்க பிரேஸ்லேட்டை வாங்கினார். அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதி ஆட்டம் வரை முன்னேறிய அவர் தனது நாட்டின் சகவீராங்கனை கிம் கிலிஸ்டர்சை வெற்றி கொண்டார். அப்போது ஹெனினுக்கு 4 கோடி ரூபா பரிசுப் பணமும் கிடைத்தது.

சென்ற மாதம் துபாய் ஓபன் டெனிஸ் போட்டியில் ஆடச் சென்றிருந்த ஹெனின் போட்டி தொடங்கும் முன்பாக அங்குள்ள பிரபல நகைக்கடைக்குப் போய் ஒரு அழகான நெக்லஸை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தார். இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்திலும் ஹெனினே வெற்றியும் பெற்றார். அவருக்கு இறுதிப் போட்டியின் வெற்றிப் பரிசாக 42 இலட்சம் ரூபா பரிசும் கிடைத்தது.

இதல் ஒரு ஆச்சரியமான விடயம என்னவென்றால் இவர் தங்கம் வாங்கினால் பட்டம் வென்று பரிசுப் பணத்தையும் குவித்துவிடுகிறார். இந்த சென்டிமென்ட் ஹெனினுக்கு அமோகமாய் வெற்றியளித்து வருகிறது என்பதுதான் ஹெனினைப் பற்றிய பிந்திய தகவல்!

இவரைப் போல அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் கப்ரியாட்டிக்கு வேறொரு விதத்தில் அழகு பார்க்கும் பழக்கம் உண்டு. எங்கு விளையாடப் போனாலும் அவர் அந்நகரிலுள்ள பிரபல பியூட்டி பார்லருக்கு சென்று தன்னை அழகு பார்த்துக் கொள்வார். துபாய்க்குப் போயிருந்த கப்ரியாட்டி தனது கால்களுக்கு அரபிக் ஸ்டைல் மருதாணி பூசிக்கொண்டார். கப்ரியாட்டிக்கு இந்த சென்டிமெண்ட் இது வரை வெற்றியளித்த மாதிரித் தெரியவில்லை.

(யே-121)

## விளையாட்டுச் செய்திகள்


### சதுரங்கச் சுற்றுப் போட்டி

தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகும் சித்திரைப் புத்தாண்டுச் சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் (ஆண், பெண்) பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது வானவர்கள என இரு பிரிவுகளுக்கு நடைபெறும்.

பங்கு பற்றுவோர் 2004.04.12 அன்று நேரடியாக சமூகமளித்து விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

(யே)


## உலக விளையாட்டு வலம்



அவுஸ்திரேலியாவின் ஒலிம்பிக் அணிக்கான டைவிங் தேர்வுப் போட்டிகளில் லோடி ரோக்கியும், லின்டா டக்கியும் பங்குபற்றும் காட்சி.




டேர்பனில் நடைபெற்ற 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட ரக்பி இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்க அணியைச் சந்திக்கவிருந்த நியூசிலாந்து அணி வீரர்கள் தம்மைத் தயார் செய்து கொள்வதைப் படத்தில் காண்கிறீர்கள்.



அமெரிக்க பேஸ் பந்து விளையாட்டில் சன்பிரான் ஸிஸகோ அணியினர் விளையாடும் காட்சி.



லேக்கர்ஸ் அணியும் சிக்காகோ புள்ஸ் அணியினரும் தேசியக் கிண்ணத்திற்காக மோதுகின்றனர்.



அமெரிககாவில் நடைபெறும் ஐஸ் ஹொக்கிப் போட்டிகளில் இருந்து ஒரு காட்சி.



அவுஸ்திரேலியாவில் நடக்கும் அலைச் சறுக்கல் போட்டிகளில் பங்கெடுக்கும் அமெரிக்க வீரர்



கொல்ப் வீரர் கூஷன்



பேஸ் பந்து வீரர் பரீ பொண்ட்ஸ்

# கிரிக்கெற் உலகில் புயலாக புதிய இளம் வீரர்கள்

தாங்கள் தான் கிரிக்கெற்றின் வருங்காலம் என்பதை அண்மைக்



YUVRAJ SINGH
இவனிருக்கக் கவலை யில்லை

காலமாக நடைபெறுகின்ற போட்டிகளில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் புதிய இளம் வீரர்கள் நிரூபித்து வருகின்றனர். தற்போது



UMAR GUL - புயலாக வீசியது

கிரிக்கெற ரசிகர்க்ளின் பார்வையை தன்வசம் ஈர்த்து வைத்துள்ள இந்திய - பாகிஸ்தான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தானின் வெற்றிக்கு முக்கிய காரணமாகவிருந்தவர்கள் இளம் வீரர்களே.

இளம் வீரர்களைக் கொண்ட அணியாக களம் இறங்கிய பாகிஸ்தான் அணி சாதனைகளை நிலை நாட்டி வருகின்றது. அநேகமாக குறிப்பிட்டுச் சொல்லப் போனால் இந்திய அணியுடனான 2வது டெஸ்ட் போட்டியைப் பாகிஸ்தான் வெல்வதற்கு அதன் இளம் வீரர்களே காரணகவிருந்தனர்.

பாகிஸ்தான் அணியின் இந்த வெற்றியின் பின்னணியில் 19 வயதுடைய உமர் குல் காணப்படுகிறார். முல்தானில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய ஆரம்ப துடுப்பாட்டவீரர் விரேந்திர ஷேவாக் பெற்ற 309 ஓட்டங்களின் பாதி அளவிற்குக் இந்திய அணியின் ஏனைய வீரர்களால் எடுக்க முடியவில்லை அந்த அளவிற்கு இந்திய அணிக்கு திகிலைத் தந்தவர், இப் போடடியின் ஆட்ட நாயகன் விருது பெற்ற பாகிஸ்தான் அணியின் 19 வயதுடைய இளம வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் ஆவார்.

பங்களாதேஷ் அணிக் கெதிராக சபீர் அஹமதுவும், உமர் குல்லும் நிறைய விக்கெற்றுக்களை வீழ்த்தி பாகிஸ்தான் அணி 3-0 என்ற அடிப்படையில் வெல்ல உதவியவர்கள். இப்போட்டியில் உமர் குல் 15 விக்கெற்றினை வீழ்த்தினார். முல்தான் டெஸ்ட் சபீர் அஹமதுவின் ஆட்டம் சரியாக இல்லாது போனதாலோ அல்லது அவரது தேகநிலை சரியாக இல்லாமல் உள்ளதாலோ அவருக்குப்பதில் லாகூர் போட்டியில் வாய்ப்புப் பெற்ற உமர் குல் இந்திய அணிக்கெதிராக புகுந்து விளையாடினார். 12 ஓவர்கள் பந்து வீசி 2 மெய்டின்கள் அடங்கலாக 31 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

இந்த டெஸ்ட் போட்டியை வென்றால் தொடரை 2-0 என்று வென்றுவிடலாமோ, என்ற ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்திய அணியை உமர் குல் தனது சிறப்பான பந்துவீச்சு மூலம் நிலை குலையச் செய்தார். ஷேவாக், டிராவிட், டெண்டுல்கர், லக்ஸ்மன், பட்டேல் போன்ற முக்கிய வீரர்களை



ASIM KAMAL - வீசியதைப் பந்தாடினேன்

ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இந்திய அணியைத் திணறடிக்க வைத்தார். முதல் இனிங்ஸில் 5 விக்கெற்றிளை வீழ்த்திய குல்



IMRAN FARHAT- சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தியவன்

இரண்டாவது இனிங்ஸில் 65 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றினை மாத்திரமே வீழ்த்தினார். பாகிஸ்தான் அணியில் இப்போட்டியில் இடம்பெற்ற இளம் சுழல் பந்து வீச்சாளரான டினேஸ் கனேரியா, உமா குல்லுக்கு உதவியாக இரணடு இனிங்ஸிலும் மொத்தமாக 5விக்கெற்றினைக் கைப்பறறினார்.

உமர் குல்லின் பந்து வீச்சின் மூலம் 147 ஓட்டங்களுக்கு 7 விக்கெற் என்ற இக்கட்டான நிலையில் இருந்த இந்திய அணியை பள்ளத்தில் இருந்து மீட்டெடுத்தனர். இளம் வீரர்களான யுவராஜ் சிங் மற்றும் இர்.:.பான் பதான் ஒரு நாள் ஆட்டங்களில் இந்திய அணியில் பலமுறை ஜொலித்துள்ள யுவராஜ் சிங் 14 அரைச் சதங்களையும், 2 சதங்களையும் பெற்றுள்ளார். இந்த ஆண்டு ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக யுவராஜ் அடித்த சதம்(139) அவருக்கு ஆட்டநாயகன் விருதைப் பெற்றுத் தந்தது. இப்படியான அபார ஆட்டங்கள் அவருக்கு டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆடும் வாய்ப்பினை பெற்றுக்கொடுததன. இந்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக் கொண்ட யுவராஜ் முல்தான் டெஸ்ட்டில் இப்போது இரண்டாவது டெஸ்டில் அரைச்சதத்தினைப் (59) பெற்றார். இப்பொழுது இரண்டாவது டெஸ்ட்டில் தனது கன்னிச் சதத்தினைப் (112) பெற்றதன் மூலம் தன்னை அணியில் நிரந்தரமாக இணைத்துக் கொண்டார்.

முதலாவது இனிங்ஸில் யுவராஜ் சிங்கோடு 8 வது விக்கெற் ஜோடியாக நின்று ஆடி 117 ஓட்டங்கள் குவிக்க உதவிய இளம் வேகப்பந்து வீச்சாளரான இர்.:. பான் பதான் அரைச் சதத்தை எடுப்பதற்கு வெகு அருகில் (49) இருந்த நிலையில் அதை அடையாமல் தடுத்து நிறுத்தினார் கனேரியா. துடுப்பாட்டத்தில் கலக்கிய பதான் பந்து வீச்சில் 44 ஓவர்கள் பந்து வீசி (14 மெய்டின்) 107 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றினைக் கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணியின் துடுபபாட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான இம்ரான் பஹாட் என்ற இளம் வீரரின் பங்களிப்பு முக்கியமாகக் காணப்பட்டது. இவர் 204 பந்துகளை எதிர்கொண்டு 14 பவண்டரிகள் அடங்கலாக 101 ஓட்டங்களை விளாசினார். அத்துடன் அஸிம் கமால் தனது பங்கிற்கு 3 சிக்ஸர்கள், 7



PARIHEEVE PATEL
வளரும் இளங்கன்று

பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கப் போராடிய இந்திய அணியை இரணடாவது இனிங்ஸ்ஸில் தனது சிறந்த துடுப்பாட்டம் மூலம் காப்பாற்றினார் இளம் விக்கெற் காப்பாளரான பார்த்தீப் பட்டேல். கடைசி வரை ஆட்டமிழக்காது 108 பந்துகளை எதிர்கொண்டு (10 பவுண்டரிகள் அடங்கலாக) 62 ஓட்டங்களைப் பெற்றார். இந்திய அணியைப் பொறுத்தவரை இவரின் பங்களிப்பை யாரும் மறக்க முடியாது.

இரு அணிகளின் இளம் வீரர்களுக்கிடையிலான போட்டியாக இந்த இரண்டாவது போட்டியைக் கருதலாம். இரு அணி வீரர்

நோயல்

களும் சிறந்து விளங்கினார்கள். இவர்களின் பங்களிப்பு மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் காணப்படுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

□

# பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனுஸ் ஓய்வு பெறுகிறார்

கிரிக்கெற் உலகின் சிறந்த வேகப் பந்து வீச்சாளராகவும், பல வேகப் பந்து வீச்சாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவருமான



பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வக்கார் யூனுஸ்ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

தற்போது 32 வயதுடைய வக்கார் யூனுஸ் சுமார் 8 வருட காலம் பாகிஸ்தான் அணியின் மிகப் பிரபலமான ஆரம்பப் பந்துவீச்சாளர் இருவருரில் ஒருவராகத் திகழ்ந்தவர். உலகின் பலம் மிக்க வேகப் பந்து வீச்சாளர்களா கத் திகழ்ந்த வஸீம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகிய இருவரும் ஒரு காலத்தில் அவர்களின் ஆரம்ப ஆங்கில எழுத்தின் மூலம் கிரிக்கெற் உலகின் பயங்கரத் “தீ” கள் என வர்ணிக்கப்பட்டனர். எனினும் இருவருக்கும் இடையில் இருந்த கருத்து முரண்பாடுகள் காரணமாக இவர்கள் இருவரும் அணியில் விளையாடிய பல சந்தர்ப்பங்களில் பாகிஸ்தான் அணியால் வெல்லமுடிய வில்லை.

வக்கார் யூனுஸின் கிரிக்கெற் வாழ்வு முடிவுக்கு வரக் காரணம் இவர் தலைமையேற்று நடாத்திய 2003ஆம ஆண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற உலகக் கிண்ணத்தின் போது பங்கு பற்றிய போட்டிகளில் நமீபியா, நெதர்லாந்து தவிர்ந்த ஏனைய அணிகளான அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, சிமபாப்வே ஆகிய அனைத்து அணிகளிடமும் தோல்வியடைந்தமையாகும். இவர் உட்பட அணியின் 7 சிரேஷ்ட வீரர்கள் அணியில் இருந்து விலக்கப்பட்டனர். அது முதல் வக்கார் ஓய்வு பெறும் வரை அவரைப் பாகிஸ்தான் அணியில் சேர்த்துக் கொள்வதற்கு அணித் தெரிவாளர்கள் இடமளிக்காமை குறிப்பிடத்தக்கது.

1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி பஞ்சாப் மாநிலத்தின் வெஹாரி எனும் இடத்தில் பிறந்த வக்கார் யூனுஸ் தனது 19வது வயதிலே பாகிஸ்தான் தேசிய அணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இவர் முதன் முறையாக 1989/90 காலப் பகுதியில் இடம் பெற்ற பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையில் கராச்சியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி சார்பாக அறிமுகமானார்.

87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள யூனுஸ் 373 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார். 23.56 ஓட்டங்களைச் சராசரியாகக் கொண்டுள்ள இவரது சிறப்புப் பந்து வீச்சு 76 ஓட்டங்க்ளுக்கு 7 விக்கெற்றுக்க்ளாகும். 22 தடவைகள் இனிங்ஸ் ஒன்றில் 5 அல்லது அதற்கு அதிகமான விக்கெற்றுக்க்ளையும், 5 தடவைகள் டெஸ்ட் போட்டியொன்றில் 10 அல்லது அதற்கு அதிகமான விக்கெற்றுககளையும் கைப்பற்றியுள்ள வக்கார் டெஸ்ட் போட்டிகளின் துடுப்பாட்டத்திலும் 1010 ஓட்டங்களை 10.20 ஓட்டங்கள் என்ற சாராசரி ரீதியில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1989/ 90 காலப்பகுதியில் சார்ஜாவில் இடம்பெற்ற சம்பியன் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பாகிஸ்தான் சார்பாக வக்கார் விளையாடினார். கடந்த உலகக்கிண்ணம் முடியும் வரை 262 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள வக்கார் 416 விக்கெற்றுக்களை கைப்பற்றி ஒருநாள் போட்டிகளில் அதிகூடுதலான விக்கெற்றுக்கள் கைப்பற்றியவர்கள் வரிசையில் இரண்டாவது ஸ்தானத்தில் உள்ளார். இவரது சராசரி 23.84 ஓட்டங்களாகும். 36 ஓட்டங்களுக்கு 7 விக்கெற்றுக்ளைத் தனது சிறப்புப் பந்து வீச்சாகப் பதிவு செய்த வக்கார், ஒரு காலத்தில் இதனை உலக சாதனையாகவும் நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது ஒரு நாள் போட்டிகளில் வக்கார் 14 தடவைகள் 14 விக்கெற்றுக்களையும், 13 தடவைகள் 13 விக்கெற்றுக்களையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

இவருக்கு அணித்தலைமைப் பதவி வழங்கப்பட்டபின்னர் டெஸ்ட் போட்டிகளில் 17 போட்டிகளுக்குப் பாகிஸ்தான் அணிக்குத் தலைமைதாங்கி 10 போட்டிகளில் வெற்றியும், 7 போட்டிகளில் தோல்வியும் பெற்றுள்ளார். அத்துடன் 62 ஒருநாள் போட்டிகளுக்குப் பாகிஸ்தான் அணிக்குத் தலைமை தாங்கியுள்ள வக்கார் 37 வெற்றிகளையும் 23 தோல்விகளையும் பெற்றுள்ளார். இரண்டு போட்டிகளில் எவ்வித முடிவையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(யே-121)

# கிறிஸ்துவின் உயிர்ப்பே கிறிஸ்தவத்தின் பிறப்பு

விதையானது மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது



அப்படியே இருக்கும். "இயேசுவைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்று போட்டனர். கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்ப்பித்தார். (அப் பணி 10:40) கிறிஸ்தவம் இன்றும் பரந்து, விரிந்து வியாபித்துள்ள தென்றால் அதற்கான காரணம் இயேசு உயிர்பெற்று எழுந்ததே. வெறுமனே அவர் யாருடைய கண்களிலும் படாமல் விண்ணகம் சென்றிருப்பாராகில் அவரை நம்பி இருக்க மாட்டார்கள். இயேசு உயிர்த்த பின் 40 நாட்கள் அளவாகச் சீடரோடு உண்டு, உரையாடி, உறவாடினார். அதன் பின் சீடர்கள் கண் முன்பாகவே வானகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். "உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல், தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார். (அப். பணி 10:42) வெளிப்படுத்தப்பட்டவர்களின் சாட்சியமே திருச்சபையில் பல ஆயிரம் மக்கள் மனந்திரும்பக் காரணமாகியது.

### கிறிஸ்துவின் உயிர்ப்பே வாழ்வானது

உயிருள்ள மனிதர்களாகிய நாங்கள் பல வேளைகளில் நடைப்பிணங்களாக வாழ்கின்றோம். எங்களுடைய வாழ்வு பலருடைய வாழ்வுக்கு ஒளி கொடுப்பதாய் அமையாமல் பலர் தவறான பாதையில் செல்ல வழிகாட்டுகின்றது.

சிறியோரை, இளையோரை எத்தனை பெரியவர்கள் நடுநிலை வகிக்கச் செய்யாமல் பிழையான வழிகாட்டலைச் செய்திருக்கின்றார்கள். கொள்ளை விதைத்து விட்டு நெல்லை அறுவடை செய்ய நினைப்பது மடமையான செயலாகும். துணைக்கு வந்தவனுக்கு துரோகம் செய்துவிட்டு நேர்மையை, உண்மையைக் கடைப்பிடிக்க மற்றவர்களை நிர்ப்பந்திக்க முடியாது.

தியாகங்கள் இல்லாத விடுதலை வாழ்வு நிலையானது அல்ல. இயேசுவின் அளவிட முடியாத தியாகமே முழு மனித சமுதாயத்திற்கும் விடுதலையைப் பெற்றுத் தந்தது. (கிறிஸ்து உயிர்த்திராவிட்டால் கிறிஸ்தவனின் விசுவாசம் வீணானது) என்று புனித பவுலடியார் கூறுகின்றார்.

### தேவையுள்ள இடத்திற்கே சேவை

பொல்லாரும் புரட்டாரும் நல்லார் போல் வாழும் உலகிலே எல்லோரும் சமம் என்பது இழிவானது. கல்லார்ாய் பல கற்றோர் பொல்லாது செய்து புதுச் சமுத்தாயம் படைத்தல் அரிதாகும்.

சீடர்களின் பாதங்களைக் கழுவிய தலைவனாகிய இயேசு, நீங்களும் இவ்வாறு செய்யவேண்டும் என்று படிப்பினை தந்தார். பணிசெய்யப் புறப்பட்டோர், தலைவர்கள் பணி செய்யப்படவேண்டிய சமுதாயத்தை இனங்காணாவிட்டால், இரங்கி வராவிட்டால் உயிருட்டமான சமுதாயத்தை உருவாக்கலாம் என்பது பகற் கனவாகும். இயேசு ஏழைகளைக் கைவிடப்பட்டவர்களான, ஒதுக்கப்பட்டவர்களை நோயால் வருந்தியோரை தேடிப் பணிபுரிந்தார். அவர்கள் மனங்களிலே அமர்ந்தார். இன்று எம் பணிகள் எங்கே? சிந்திப்போம்.

## பரமபிதா காட்டிய பாதை

### எமக்கு நாமே நீதிபதி

பிலாத்து என்ற ரோமையரின் ஆளுநன் இயேசுவைக் கேட்டான் "உண்மையா? அது என்ன?" உண்மையை மறைக்க வேண்டும் என்பதற்காகவே யூதக் கும்பல்கள் ஒரு யூத மகனாக இயேசுவை கொலை செய்வித்தார்கள். மூன்று நாட்களுக்கு மேல் உண்மையை மறைக்க முடியவில்லை. மூன்றாம் நாள் இயேசு உயிர்பெற்று எழுந்தார்.

உண்மையை மூடிமறைத்து பதவிகளை அடைந்து கொள்கின்றவர்கள் எத்தனை பேர். உடன் பிறந்தவனை வீழ்த்தி சுகபோக வாழ்வைத் தேடிக் கொள்பவர்கள் எத்தனை பேர். இவை எல்லாம் வந்த வேகத்திலேயே மறைந்து ஒழியும்

இயேசு என்ன சொல்கின்றார் என்றால் "பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றாயோ அதனையே பிறருக்குச் செய்" நாமே எமக்கு நீதிபதிகளாகவும் இருக்கின்றோம். கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடே நிலையாய் இருந்தது. மணல் தரையில் கட்டப்பட்ட வீடோ, வெள்ளத்தினாலே அடித்துச் செல்லப்பட்டது. எதை விதைக்கின்றோமோ அதனையே அறுப்போம்.

### சாட்சியம் பகர்வோம்

கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாகின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கே தான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கின்றார். (கொலோ 3:1) தீயன செய்வோரும், அநியாயம் செய்பவர்களும் நிச்சயம் தண்டனைக்கு ஆளாவார்கள். மரணம் என்பது திருடனைப் போல வரும் என்று இயேசு சொன்னார். நல்லவற்றையே செய்து கொண்டு இருக்கும் போது மரணத்துக்கு அஞ்சத் தேவையில்லை. அவன் நிம்மதியாக உறங்குவான். மகிழ்ச்சியாக இருப்பான். பிறரை நேசிப்பான். கிறிஸ்துவின் சாட்சியாக விளங்குவான். அவனாலே பலர் பயனடைவர்.

அன்பு நிறை சகோதரங்களே ஏன் நல்வாழ்வின் பரிசான விண்ணக வாழ்வுக்குரிய காரியங்களில் நம்மால் ஈடுபட முடியாது. வெளிவேடத்தனங்களைக் களைந்து கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாமும் பங்குகொள்ள வேண்டுமென்றால், நாமும் மறு கிறிஸ்துக்களாக வாழ முற்பட வேண்டும். இதற்கு திருவிவிலிய வாழ்வும் நற்கருணை வாழ்வுமே எம்மை வழிப்படுத்தும். அவ்வாழ்வைத் தேர்ந்து சாட்சியம் பகர்வோம். □

அன்ரனி பீற்றர்

## மண்கும்பானில் மழையில்லை

(மண்கும்பான்)

மண்கும்பான் பகுதி விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கையைக் கைவிடும் நிலையில் உள்ளனர்.

மழையின்மை காரணமாக இப்பகுதி நிலங்கள் வறண்டும் நீர்நிலைகள் வற்றியும் போயுள்ளன.

இதனால், வைத்த பயிர்களுக்கு நீர்பாய்ச்ச முடியாதிருப்பதாகவும் பயிர்ச் செய்கையை கைவிடும் நிலையில் தாம் இருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (உ-56)

## தரமற்ற அரிசி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலர் உணவு நிவாரணத்திற்கு தமக்கு விநியோகிக்கப்பட்ட அரிசி தரமற்றது என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

நாராந்தனை வடக்குப் பகுதிப் பொதுமக்களே இந்தமுறைப்பாட்டைச் செய்துள்ளனர். (உ-75)

## போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் படகுமூலமாக கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 7 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இராமநாதபுரம் பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

இராமநாதபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இலங்கைக்கு போதைப் பொருள்கள் கடத்தப்பட்டுவருவதாக இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனையில் இப்போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார், ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தி)

## வாக்குறுதிகளை அள்ளிவீசும் தேர்தல் அறிக்கை பிரதமர் வாஜ்பாய் வெளியிட்டார்

(புதுடில்லி)

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி, நல்ல நிர்வாகம், அமைதி ஆகியவற்றுக்குத் தேசிய ஜனநாயகத் தேர்தல் அறிக்கையில் உறுதி கூறப்பட்டுள்ளது.

வரும் மக்களவைத் தேர்தலுக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையை பிரதமர் வாஜ்பாய் புதுடில்லியில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

கட்சியின் தலைவர் வெங்கைய நாயுடு, கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் அப்போது உடனிருந்தார்கள்.

அடுத்த 5 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை 8 முதல் 10 சதவீதம் வரை எட்டவோ, 2015க்குள் ஏழ்மையை ஒழிக்கவோ தேர்தல் அறிக்கை உறுதிபூண்டுள்ளது.

கிராமப்புற அபிவிருத்தி, விவசாயிகள் நலன், மின்வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, தொலைபேசி, மின்னணு தொலைத் தகவல் மேம்பாடு, உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றைக் குறித்த கால வரம்புக்குள் நிறைவேற்றுவதற்கு தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

மற்றும் கிராமப்புற, தேசிய நெடுஞ்சாலைகளை அமைத்தல், நாடுமுழுவதும் ரயில் இணைப்புக்களுடன் ரயில் நிலையங்களின் மேம்பாடு, விமானப்போக்குவரத்தில் வெளிப்படையான கொள்கை ஆகியவை உறுதிகூறப்பட்டுள்ளன.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்து கிராமங்களும் சுத்தமான குடிநீர் பெறும் வகையில் தேசிய குடிநீர்த் திட்டம் புதிய அரசு அமைந்த 30 தினங்களுக்குள் துவக்கப்படும் என்றும், இவ்வாண்டு ஒகஸ்ட் 15க்குள் தேசிய நதிகள் திட்டமும் ஒகஸ்ட் 15ஆம் திகதியன்று கிராமப்புற, நகர்ப்புற இடை வெளியை நீக்கும் திட்டம் துவக்கப்படும் என்றும் அத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் வாஜ்பாய் அயோத்தியில் இராமர் ஆலயம் அமைக்கும் விஷயம் பொதுவான தேசியப் பிரச்சினை என்பதால் அதை நிராகரிக்க முடியாது என்று கூறினார். எனினும் இதை முன்னிறுத்தி தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றார்.

தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தும் வகையில் இந்தப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை மூலமாகவோ, நீதிமன்ற தீர்ப்பன்படியோ ஒரு முடிவை அனைவரும் ஏற்கவேண்டும் என்றும் தேர்தல் அறிக்கை தெளிவுபடுத்துவதாகவும் பிரதமர் கூறினார். (து)

## தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சியினரைக் கைது செய்ய காவல்துறைக்கு இரகசிய உத்தரவு

### தேர்தல் ஆணையத்துக்குப் புகார்

தமிழ்நாட்டில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக அரசு இயந்திரமும் காவல்துறையும் பயன்படுத்தப்படுவதாகவும் அதைத் தடுத்து நிறுத்தும்படியும் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் புகார் செய்துள்ளன.

இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட புகார் மனு தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஆளும் அ.இ.அ.தி.மு.க. தேர்தல் சின்னம் பொறித்த சேவைகள் முதலியன இலவசமாக விநியோகிக்கப்படுவதாகவும், ஆளும் கட்சிக் கூட்டணி அவதூறுப் பிரசாரம் செய்துள்ளது என்றும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சிகளின் முக்கிய ஊழியர்களைக் கைது செய்யக் காவல்துறைக்கு உத்தரவு இடப்பட்டதாகத் தகவல்கள் வந்துள்ளன என்றும், இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அம்மனுவில் மேலும் கூறப்பட்டுள்ளது. (து)

## ஜெ.கலந்துகொண்ட கூட்டத்தில் விதிகள் மீறப்பட்டதாகப் புகார்

(புதுவை)

தமிழக முதலமைச்சரும், அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளருமான ஜெயலலிதா புதுச்சேரி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது தேர்தல் நடத்தை விதிகள் மீறப்பட்டதாகப் புதுவை துணைத் தேர்தல் அதிகாரி கூறியிருப்பதைப் புதுவை அ.இ.அ. தி.மு.க. செயலாளர் ஏ.அன்பழகன் மறுத்திருக்கிறார்.



ஜெயலலிதா வருகையையொட்டி புதுவை பொதுப் பணித்துறையின் முன் அனுமதி பெற்ற இடங்களிலேயே கொடிகளும், தட்டிகளும், பானர்களும், கட்-அவுட்களும் வைக்கப்பட்ட நிலையில் இது தேர்தல் நடத்தை விதிகளை மீறுகிறது என்று புதுவைத் துணைத் தேர்தல் அதிகாரி கூறியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது என்றும் அன்பழகன் கூறியிருக்கிறார்.

தி.மு.க.தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி புதுவையில் அ.இ.அ.தி.மு.க.வின் பெயருக்குக் களங்கம் விளைவிக்க தேர்தல் இயந்திரத்தைப் பயன்படுத்துகிறது என்று அவர் குற்றம்சாட்டினார். (து)

## தேர்தல் நிதி வசூலிப்பில் விதிமீறல் இல்லை-கருணாநிதி

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் தேர்தல் நிதி வசூலித்தலில் விதி மீறல் எதுவும் இல்லையென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தேர்தல் ஆணையத்திடம் அ.இ.அ.தி.மு.க இது தொடர்பாக அளித்துள்ள புகாருக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ளார். அறிக்கையில் இதனை தி.மு.க. சட்டபூர்வமாகச் சந்திக்கும் என்று கூறியுள்ளார்.

1957 ஆம் ஆண்டு முதல் தேர்தலில் போட்டியிட்ட அனுபவம் தி.மு.க.வுக்கு உள்ளது என்றும், இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொள்வது எனத் தனது கட்சிக்குத் தெரியும் என்றும் கருணாநிதி கூறியிருக்கிறார். (து)

# தேர்தல் முடிவுகளும் ஆட்சி நிலைப்பாடுகளும் தமிழர்க்குச் சாதகமா?

**கவிதரன்**

மிகப் பெரிய அளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வெற்றியை, தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் உறுதி செய்துள்ளதால், தமிழினத்திற்கு இது ஒரு பாரிய வெற்றியாகக் கணிக்கப்பட்டாலும், ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகளும் அதன்பின் உருவாகியுள்ள ஆட்சி நிலைப்பாடுகளும், தமிழினத்தின் வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளனவா என்று ஒருமுறை ஆராய்ந்து பார்ப்பது நல்லது.மகிந்த ராஜபக்ஷ பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே லக்ஷ்மன் கதிர்காமர் தான் பிரதம மந்திரி என்று பரவலாக நம்பப்பட்டதுடன், ஜனாதிபதி கூட, அவரது பெயரையே முதலில் முன்மொழிந்தாலும், பின்னர் நீண்ட நேர ஆலோசனைகளை நடாத்தி, மகிந்தவை பிரதமராக அறிவித்தார்.

### பிரதம மந்திரி பதவியின் பலம்

உண்மையில், ஜனாதிபதியின் கட்சி தவிர்ந்த பிறிதொரு கட்சியின் தலைமையில் பாராளுமன்றம் இருந்த காரணத்தினாலேயே, பிரதம மந்திரி என்ற பதவி கடந்த இரண்டு ஆண்டுகளாக முக்கியத்துவம் பெற்றது. அதற்கு முன்னர், ஆளும் கட்சியிடமே ஜனாதிபதி, பிரதம மந்திரி என்ற இரு பதவிகளும் இருந்த போது, பிரதம மந்திரியாக யார் இருந்தார் என்று கூட பலருக்குத் தெரியாது. உண்மையில், ஜனாதிபதி பதவியேற்றதும், பிரதம மந்திரியாக தனது தாயார் சிறீமாவோ பண்டாரநாயக்காவையே நியமித்திருந்தார். அவர் அந்தக் கதிரையில் ஒரு கௌரவ பொறுப்பாளராக உட்கார்ந்திருந்தாரே ஒழிய, பாராளுமன்றத்தை ஆட்டிப்படைக்கும் பலம் உட்பட, நாட்டின் ஆட்சி சார்ந்த அத்தனை முடிவுகளையும் எடுக்கும் பலம் ஜனாதிபதிக்கே இருக்கிறது.

ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில், உருவாக்கப்பட்ட பலம்பொருந்திய சர்வ அதிகாரங்களையும் உள்ளடக்கிய ஜனாதிபதிப் பதவிக்கு முன்னே, பிரதமர் பதவி ஒரு செல்லாக் காசுதான். திடீரென ஜனாதிபதியின் கட்சி தவிர்ந்த இன்னுமொரு கட்சி பாராளுமன்றத்தை அதிகாரம் செய்கின்ற நிலை வந்தபோதுதான், ஜே.ஆர்.ஜயவர்த்தன அவரது காலத்தில் தனது கதிரையின் பலத்தை உறுதிசெய்ய் என்னவெல்லாம் செய்திருந்தார் என்பது பலருக்குப் புரிய ஆரம்பித்தது. எதிர்க்கட்சியின் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே. முன்னணி, பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றபோதும், ஆரம்பத்திலிருந்தே ஜனாதிபதியின் சர்வ அதிகாரத்திற்கு முன்னே, ஒவ்வொரு அசைவிற்கும் ஜனாதிபதியின் தலையசைப்பை எதிர்பார்த்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. ஒரு கட்டத்தில், உச்ச நீதிமன்றத்தில் இதுகுறித்து விளக்கம் கேட்டபோதுகூட, ஜனாதிபதியின் பலத்திற்கு சார்பாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது. அமைச்சுக்களைப் பறித்தமை, தேசிய ஊடகங்களில் ஆதிக்கம் செலுத்தியமை, பாராளுமன்றத்தைக் கலைத்தமை, முப்படைத் தளபதிகளை தனது நேரடித் தலைமையில் வைத்திருந்தமை உட்பட, 'நாட்டின் இறைமைக்குக் குந்தகம்' நிகழ்வதாகக் கூறி, எதைச் செய்வதற்கும் ஜனாதிபதி என்ற கதிரைக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், பிரதம மந்திரியாக யார் இருந்தாலும், அவர் எடுக்கும் எந்தவொரு முடிவையும் காரணம் கூறாது தடுத்து நிறுத்தும் உரிமை கூட ஜனாதிபதியிடமே இருந்தது. இப்போது நிலமை வேறு. ஆட்சி மீண்டும் ஜனாதிபதியின் கட்சியிடமே வந்துவிட்டது. ஜனாதிபதியின் கட்சியிடம் பாராளுமன்றம் இருக்கும்வரை, பிரதம மந்திரியின் ஆசனம் ஒரு வெற்றுக்கதிரையே. கிட்டத்தட்ட இந்தியாவின் ஜனாதிபதி கதிரையும் சிறீலங்காவின் பிரதம மந்திரி கதிரையும் ஒரே தகுதியைக் கொண்டவை தான். ஆக, பாராளுமன்றத்தை தலைமை தாங்கி நடத்துகின்ற வாய்ப்பு ஒன்று இருந்தாலும், அங்கே ஜனாதிபதியின் நேரடிக் கண் காணிப்பின் கீழேயே எந்த முடிவுகளும் எடுக்கப்படுவதோடு, கருத்துக்களும் முன்வைக்கப்படும். பாராளுமன்றத்தை அவசர அவசரமாகக் கலைத்து, பொதுத்தேர்தலொன்றை அறிவித்ததற்குக் கூட அதுவே முக்கிய காரணம்.

### பொதுத் தேர்தலுக்கான காரணம்

ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சித் தலைமையில் பாராளுமன்றமும் இருந்தபோது, எதிர்க்கட்சியினர் மக்களின் எதிர்ப்பலையை எழுப்பியதன் மூலம், பாராளுமன்றத்தில் தொடர்ச்சியான குழப்பங்கள் ஏற்பட்டபோதே, வேறுவழியின்றி ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா, பொதுத் தேர்தலை அறிவிக்க நேர்ந்தது. தேர்தலில் தோற்றதும், சரியான தருணத்திற்காகக் காத்திருந்து, எப்படியும் ஆட்சியைத் தனது கட்சியின் கீழ கொண்டுவரும் நோக்குடன் மட்டுமே பொதுத் தேர்தலுக்காக வியூகமமைத்து ஜே.வி.பியுடன் கூட்டணிஅமைத்தார். இப்போது அவர் நினைத்தபடியே அவரது கட்சித் தலைமைக்குக் கீழே ஆட்சி முழுமையாக வந்துவிட்டது. ஏற்கனவே திட்டமிட்டபடி, தனது அமைச்சிலுள்ள ஒருவரை பிரதம மந்திரியாக நியமிப்பதன் மூலம், விரைவில் ஜனாதிபதி ஆட்சிக்கு முடிவுரை எழுதி, பிரதம மந்திரியின் கதிரைக்கு அதிக பலத்தைக் கொடுக்கும் அதே நேரத்தில், ஆளும் கட்சியின் தலைவர் என்ற வகையில், பிரதம மந்திரி ஆசனத்தில் தானே அமர்வதுதான் தற்போதைய நோக்கம். எள் என்றால் எண்ணெய்யாக் காலடியில் வந்து நிற்கும் கதிர்காமரை பிரதமர் கதிரையில் இருத்தி விட்டால், வேலையை சுலபமாக முடிக்கலாம் என்று சந்திரிகா விரும்பினாலும், எதிர்ப்புக் கிளம்பியபோது, ஜனாதிபதி ஆட்சியை மாற்றியமைத்து பிரதம மந்திரி ஆட்சிக்கு குறிப்பிட்ட மாதத்திற்குள் ஆயத்தம் செய்வதற்கு இணங்கும் ஒருவரை மட்டுமே நியமிக்கும் நிலைப்பாடு சந்திரிகாவிடம் இருந்தது. அதை நிறைவேற்றக்கூடிய 'தாய் சொல்லைத் தட்டாத' அடுத்தவரான மகிந்த அந்தக் கதிரைக்கு வழிமொழியப்பட்டார். அந்த விசுவாசமான குழந்தை, பதவிப் பிரமாணம் செய்த கையுடன், மறக்காது தனது விசுவாசத்தை வெளிக் காட்டியது.ஜனாதிபதி ஆட்சியை மாற்றியமைத்து, சந்திரிகாவை பாராளுமன்றத்தின் பிரதம மந்திரிக் கதிரையில் இருத்துவதே எனது முதல் கடன் என்று தெட்டத் தெளிவாக உள்ளதைச் சொல்லி விட்டது அந்த [illegible] விசுவாசமான ஊழியன்.

### தமிழ்க் கூட்டமைப்பின் வெற்றி மூலம் சாதிக்க விரும்பியதென்ன?

சரி. விஷயத்திற்கு வருவோம். எப்படியும் சந்திரிகா கூட்டணியைவிட, ரணில் கட்சி சற்று அதிகமான ஆசனங்களைப் பெறும் என்ற நம்பிக்கையுடன், அவருடன் கூட்டணி இணைந்து ஆட்சியமைக்க தமிழ்க் கூட்டமைப்புக்குப் பலம் சேர்ப்பதே எமது திட்டமாக இருந்தது. இறுதிவரை, ஐ.தே.முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து, பாராளுமன்றத்திற்கான பெரும்பான்மைப் பலத்தை இலகுவாக நிரூபிப்பார்கள் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஐ.தே.முவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து 113 ஆசனங்களுக்கு அதிகமாகப் பெறும் என்பதில் இருவேறு கருத்து யாருக்கும் ஆரம்பத்தில் இருந்ததில்லை. இருந்தாலும், துரதிர்ஷ்ட வசமாக, வடக்கு, கிழக்கு, தெற்கில் ஏற்பட்ட அதிரடி மாற்றங்கள், சில 'நிரந்தர மாற்றங்களை உருவாக்கி விட்டன. கிழக்கின் குழப்பங்கள், முஸ்லிம் கட்சிகளுக்கு ஓரிரு ஆசனங்களை அதிகமாகக் கொடுக்க வழிசெய்தன. தெற்கில், ஹெல உறுமயவின் திடீர் உதயம், ரணில் கனவில் மண்அள்ளிப் போட்டது. மலையகத்தின் உட்கட்சிப் பூசல்கள், சில ஆசனங்கள் கைதவறிப் போக வழி சமைத்தன. வடக்கில், ஆனந்தசங்கரியின் குழப்பத்தால், வெறும் இரண்டாயிரம் வாக்குகள் குறைந்ததால் ஒரு ஆசனம் ஈ.பி.டி.பியிடம் பறிபோனது. ஐக்கிய தேசிய முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து 104 ஆசனங்களைப் பெற்றுள்ள நிலையில், ஒன்பது ஆசனங்கள் சிக்கலை உருவாக்கின. முஸ்லிம் காங்கிரசின் 5 ஆசனங்களும், மலையகக்கட்சி, மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் இரு ஆசனங் களும் அடங்கலாக 111 ஆசனங்கள் தம்வசம் உள்ள நிலையில், வெறும் இரண்டே ஆசனங்கள் குறைவான நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் வாய்ப்பை முற்றாக இழந்தது. யாழ். தொகுதியில் ஒரு ஆசனம், அம்பாறையில் ஒரு ஆசனம் உட்பட கொழும்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒருவரை நியமித்திருந்தால் கிடைத்திருக்கக்கூடிய ஒரு ஆசனத்தையும் இழந்த நிலையில், தற்போது தர்மசங்கடமான பாராளுமன்றப் பிரவேசமே காத்திருக்கிறது. தமிழர்களின் ஏகோபித்த ஆதரவுடன், முழு ஆசனங்களையும் பெற்று, ஆட்சியமைக்கும் கட்சியின் முடிவை நிர்ணயிக்கும் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வரவேண்டும் என்பதே உளமூர எமது திட்டமாக இருந்தபோது, கற்பனை பண்ணிக்கூடப் பார்க்காத சந்திரிகாவுக்கு வெற்றி பொங்கி வரும்போது தாழி உடைந்த கதையாகிப்போனது.

### முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிறுகட்சிகளின் வீழ்ச்சி

பாராளுமன்றத்தில் தமிழர்களின் குரல் ஓங்கி ஒலிக்கும் என்பது உண்மையாக இருந்தாலும், ஆட்சியதிகாரத்தை நிர்ணயிக்கும் வலிமையுள்ள கட்சியாக பாராளுமன்றம் நுழைந்தால் மட்டுமே, நாம் விரும்பும் அளவுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, எமது இலக்கை நோக்கி நகர வாய்ப்பு உருவாகியிருக்கும். சந்திரிகா கட்சிக்குத் தாவவேண்டிய தேவை யேற்படலாம் என்ற வியூகத்தில், இறுதி நேரத்தில் ரணில் கட்சிக்கெதிரான கருத்துக்களைப் பரவலாகத் தெரிவித்து வந்தவர் ரவூப் ஹக்கீம். முஸ்லிம் காங்கிரஸ் தற்செயலாக 8 ஆசனங்களைப் பெற்றிருந்தால், இம்முறை தேர்தலின் வெற்றி நாயகனாக ஹக்கீமே திகழ்ந்திருப்பார். அறுதிப் பெரும்பான்மையைத் தீர்மானிக்கும் வாய்ப்பு அவருக்கு உருவாகியிருக்கும். 7 ஆசனங்கள் பெற்றிருந்தால் கூட, ஈ.பி.டி.பி. கைகொடுத்திருக்கும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவரிடம் உள்ளவை 5 மட்டுமே. அதனால், மனிதர் அடங்கிப்போய் உட்கார்ந்திருக்கிறார். (இது முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்தாக தயவுசெய்து எடுக்க வேண்டாம், ஹக்கீமின் தேர்தல் குறித்த நிலைப்பாடுகளின் அடிப் படையில் மட்டுமே இந்த வாதம்)

### பாராளுமன்றத்தில் தனிக்குரலாக ஒலிக்க முடியுமா?

இப்போது நீங்களே ஊகித்துக் கொள்ளலாம். தற்போது நடந்து முடிந்துள்ள தேர்தல், முற்று முழுதாக ஈழத் தமிழினத்தின் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதற்கு வாய்ப்பு வழங்கிய தேர்தலல்ல. மூன்றாவது பலமான கட்சியாக உருவெடுத்திருக்கின்ற திருப்தியும், ஒரு தலைமையின் கீழ் ஒன்றாக நிற்கின்ற வெற்றியும் திருப்தியளித்தாலும், பாராளுமன்றத்தில் தனிக் குரலாக ஒலிப்பதற்கான பலத்தை நாம் நிஜமாகத் தவறவிட்டுள்ளோம் என்றே கருதவேண்டியுள்ளது. இந் நிலையில், மகிழ்ச்சி தரும் விடயங்கள் சிலவும் உண்டு. குறைந்தது எட்டு ஆசனங்களையாவது தம்வசம் வைத்திருக்கும் ஹெல உறுமய அல்லது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் ஐ.ம.சு. முன்னணியுடன் இணைந்து ஆட்சியமைக்க மறுக்கும் பட்சத்தில், மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாக, புதிய தேர்தலுக்கு நாள் பார்க்கும் நிலை வரும். ஹெல உறுமய இணைந்து செயற்பட இணங்கும் பட்சத்தில் கூட, ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்கனவே கருத்து முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்துவிட்ட நிலையில், ஹெல உறுமயவின் வருகை மேலதிக நெருக்கடிகளையே தோற்றுவிக்கும். தொழிலாளர் காங்கிரஸ் இணைவதற்கு இணங்குவதாக இருந்தால்கூட, அவர்கள் கேட்கப்போகும் முக்கிய இரு அமைச்சுக்களை ஏற்கனவே ஜே.வி.பி. தனதாக்கிக் கொண்டுள்ள நிலையில், அதுவும் கல்லில் நாருரிக்கும் கதைதான். ஆக, இந்தத் தேர்தல் ஈழத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர வெற்றி தரும் தேர்தலல்ல. இன்னுமொரு தேர்தல் வரலாம், அதுவும் மிக விரைவில் வரலாம் என்று பார்க்கும்போது, ஈழத்தமிழர்கள் இன்னும் செறிவாகத் தங்கள் ஆசனங்களை உறுதிசெய்து, மலையகக் கட்சிகளை முற்றாக ஒன்றிணைத்து, பாராளுமன்றத்தின் ஆட்சிப் பீடமேறும் கட்சியைத் தீர்மானிக்கின்ற பலத்தைப் பெறுவதே, எமது அபிலாஷைகளை வென்றெடுக்கும் நிரந்தரப் பலத்தைத் தரும். □

---

## புனர்வாழ்வு, புனரமைப்பு குழுக்கூட்டம் 20 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான அபிவிருத்திப் பணிகள் தொடர்பான புனர்வாழ்வு புனரமைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம்திகதி மு.ப.10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது இக் கூட்டத்தில், யாழ். மாவட்டத்தின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக யாழ். மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுவரும் அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து அன்றைய தினம் பி.ப. 2.00மணிக்கு யாழ். மாவட்ட விவசாயக் குழுககூட்டமும் மாலை 2.00 மணிக்கு யாழ். மாவட்ட வீடமைப்புத் தொடர்பான கூட்டமும் இடம்பெறவுள்ளது.(உ)

# இன்று ஒரு தகவல்

## கீதையும் நிர்வாகமும்

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் ஒருவர் பகவத் கீதையைப் படித்துக்கொண்டிருந்தார். "சார் நீங்கள் பார்க்கும் உத்தியோகத்துக்கும் படிக்கும் புத்தகத்துக்கும் கொஞ்சம் கூட தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லையே" என்றேன். "என்ன அப்படிக்கூறிவிட்டீர்கள். இதில் கர்ம யோகத்தைப் பற்றிப் பேசும்போது மூன்று தத்துவங்கள் வலியுறுத்தப்படுகிறது. நிர்வாகிகள் அதைப் புரிந்து கொண்டால் நல்லது" என்றார். "அது என்ன மூன்று தத்துவங்கள்?" என்றேன். அவர் கூற ஆரம்பித்தார்.

எதிலும் பற்றற்று இருத்தல் இது ஒரு தத்துவம். பலனை எதிர்பார்த்துச் செய்யாமை. இது ஒன்று. எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்வது மூன்றாவது என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. "இதற்கும் நிர்வாகத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்றேன். "விபரமாகச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று கூறினார்.

முதல் கருத்து என்ன? பற்றற்று இருத்தல். ஒரு அலுவலக மேலாளர் யார் மீதும் பற்றுக் கொள்ளலாம். எல்லோரையும் சரிசமமாக நடத்தவேண்டும். இவர் நமக்கு வேண்டியவர். அவர் நமக்கு வேண்டாதவர் என்ற எண்ணமெல்லாம் அவருக்கு வரக்கூடாது. ஒரு அலுவலகம் என்றிருந்தால் அங்கே கோள் சொல்வதற்கென்று சிலர் இருப்பார்கள். திறமையாக வேலை செய்பவர்களைப் பற்றிக்கூட இவர்கள் அதிகாரிகளிடம் தவறாகச் சொல்லி வைப்பார்கள். மேலதிகாரிகள் இவர்கள் கூறுவதைக் கேட்டு நடக்க ஆரம்பித்தால் வேலைதான் வீணாகிவிடும்.

சரி இப்போது அந்த இரண்டாவது தத்துவத்துக்கு வருவோம்! பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாதே. அப்படி என்றால் பலனே வேண்டாம் என்று அர்த்தமில்லை. லாபம் வந்தாலும் சரி நஷ்டம் வந்தாலும் சரி மனம் ஒரே சீராக இருக்க வேண்டும். நஷ்டம் வந்தால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய வேண்டும். அதை விடுத்து சோர்ந்துபோய் உட்கார்ந்துவிடக்கூடாது. அல்லது வேலை செய்பவர்களை வீட்டிற்கு அனுப்பலாமா என்று யோசிக்கக் கூடாது.

அதேபோல் இலாபம் வந்தால் அதற்காகத் துள்ளிக் குதித்துக் கொண்டு இருக்கக் கூடாது. அப்படிச் செய்யும் போது கவனக் குறைவு ஏற்பட வாய்ப்பு உண்டு. இது அடுத்த வருட நஷ்டத்துக்குக் காரணமாகிவிடும்.

மூன்றாவது தத்துவம் என்ன சொல்கின்றது. எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல். ஓர் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரைப் பார்த்து "நீங்கள் யாருக்காக வேலை செய்கின்றீர்கள்?" என்று கேட்டேன். "என்ன சார் இப்படிக் கேட்கிறீர்கள். நான் எனக்காகத் தான் வேலை செய்கிறேன்" என்றார். "அப்படியா சொல்கிறீர்கள்?" என்றேன். ஆமாம்! முதலாம் திகதியானால் சம்பளம் வாங்குகிறேன். அதற்குத்தான் வேலை செய்கிறேன் என்றார்.

சம்பளத்துக்காக வேலை செய்கிறோம் என்று நினைக்காமல் இந்த நிறுவனத்தின் முன்னேற்றத்துக்காக வேலை செய்கின்றோம் என்ற நினைப்பு வரவேண்டும். அதன் மூலம் இந்த நாட்டை வளப்படுத்துகிறோம் என்ற நினைப்பு வரவேண்டும். ஈஸ்வர அர்ப்பணம் என்றால் அதுதான். செய்யும் தொழிலே தெய்வம்.

இவ்வளவும் விபரமாகக் கூறிய நண்பர் கேட்டார் "இப்போது கூறுங்கள் சார் கீதையின் கர்ம யோகத்துக்கும் காரியாலய நிர்வாகத்துக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா?" என்றார். "நீங்கள் கூறுவது சரிதான் என்று கூறிவிட்டு எழுந்தேன்.வெளியில் வந்து நினைத்துப் பார்த்தேன். இன்று அலுவலகங்கள் இப்படியா இருக்கின்றன?

ஒருவர் கேட்டார் "என்ன இது உங்கள் அலுவலக வரவுப் பதிவேட்டில் பென்சிலை கட்டி வைத்திருக்கிறீர்கள். இதையுமா திருடிக்கொண்டு போய்விடுவார்கள்" என்றார். "இது 36வது பென்சில்" என்றார் இவர். "எங்கள் அலுவலகத்தில் பென்சில் திருட்டுப் போவதுண்டு. ஆனால் அதை இப்படிக் கட்டிப் போடுவதில்லை" என்றார். "ஏன்?" என்றார். "அப்படிக் கட்டி வைத்தால் பதிவேட்டையும் சேர்த்துக்கொண்டுபோய் விடுகிறார்கள்" என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## தீக்குளிர்ச்சி உற்சவம்

(இணுவில்)

ஏழாலை மத்தி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த தீக்குளிர்ச்சி உற்சவமும் அன்னதான நிகழ்வும் நாளை திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகும் இவ் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் மே மாதம் 5ஆம்திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.(உ-122)

# புத்தாண்டு தினத்தின் பின்னரே புலிகளுடன் சமாதானப் பேச்சு

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தின் பின்னரே தமிழீழ விடுதலைப புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்துப் பேசவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில அவர் இவ்வாறு தெரிவித்திருப்பதாக செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந் நிறுவனம் ஜனாதிபதியின் தொலைபேசி உரையாடல் தொடர்பாக வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அவ்வியக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணா அணிக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலில் இராணுவம் தலையிடாது.

இருசாராருக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலைக் காரணம் காட்டி சாமாதானப் பேச்சுவார்த்தைகள் எச்சந்தர்ப்பத்திலும் இடைநிறுத்தப்பட மாட்டாது.



விடுதலைப்புலிகளுடனான பேசசுவார்த்தைகளின் போது நேரடியாக அவ் இயக்கத்தின தலைமையுடன் பேசப்படும. எக்காரணம் கொண்டும் அவ் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணாவுடன் இது குறித்த தொடர்புகளை ஏற்படுத்தமாட்டேன். கருணாவுடன் நான் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக வெளிவரும் செய்திகளில் எதுவித உண்மைகளும் இல்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, தேவைப்படும் பட்சத்தில் அமெரிக்காவின் உதவி நாடப்படும் என்றார்.

(தி-63)

# இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் இலங்கையிலேயே நடைபெறும் - கதிர்காமர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் இலங்கையிலேயே நடைபெறும் என ஜனாதிபதியின் ஆலோசகரும், வெளி விவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.



"இந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகைக்கு அவர் வழங்கிய சிறப்புச் செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஒவ்வொரு கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஒவ்வொரு நாட்டில் நடத்தியது.

இதனால் போக்குவரத்துச் செலவுகளும், பணச் செலவுகளுமே ஏற்பட்டன. இதனை அப்போதைய அரசு கருததில்கொள்ளவில்லை. அத்துடன், அப்பேச்சுவார்த்தைகளின் மூலம் முழுமையான ஒரு முடிவுகளையும் அவ்வரசால் பெறமுடியாமல் போயுள்ளது.

இவற்றினைக் கருத்தில் கொண்டு இம்முறை நடைபெறவுள்ள பேச்சுக்களை இலங்கையில் நடத்த எண்ணியுள்ளோம்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் இடம்பெறமாட்டாது. தமிழ் மக்களின் இன விடுதலைக்காகப் பாடுபட்ட அனைத்துக் கட்சிகளுடனும் பேசப்படும். அப்போதுதான் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியும்.

கடந்தகாலப் பேச்சுக்களிலும் இவ்வாறான பிழைகளே நடந்தன. ஆனால் இனிவரும் காலத்தில் இது போன்ற பிழைகள் இடம்பெறுவதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனுமதியாது என்றார்.(தி-63)

# இராசி பலன்

**11.04.2004**

(பங்குனி 29ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி பின்னிரவு 2.05 வரை
மூலம் முற்பகல் 10.49 வரை
இராகுகாலம் - 4.36-6.06 வரை
சுபநேரம்- 9.06-10.36 வரை
உயிர்த்த ஞாயிறு

**மேடம்**
சரீரப்பிரயாசை, புதிய சிந்தை, முயற்சி கைகூடும், உத்தியோக பங்கம்.

**இடபம்**
மனக்கவலை, உடல்வியாதி, காரியதாமதம், பிறருக்கு உதவுதல்.

**மிதுனம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், நண்பரர்கள் உதவி, தொழில் நன்மை, கலந்துரையாடல்.

**கடகம்**
உடல்நலம், திடீர் பயணம், தனவருவாய், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
காரய இடையூறு, மனக்கவலை, சொத்துப் பிணக்கு, தனவிரயம்.

**கன்னி**
ரோகபயம், புதிய திருப்பம், காரிய தாமதம், பயந்த சுபாவம்.

**துலாம்**
அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், இனிய அனுபவம், வாக்கு மேன்மை.

**விருச்சிகம்**
கௌரவக்குறைவு, அதிக செலவு, முயற்சி தாமதம், வீண்வார்த்தை.

**தனுசு**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆதரவு, சயனசுகம்.

**மகரம்**
பிதா சிந்தை, கோபப்படுதல், காரியதாமதம், பணவிரயம்.

**கும்பம்**
தெய்வசிந்தை, மனமகிழ்ச்சி, காரிய சித்தி, பெருமையடைதல்.

**மீனம்**
சுபநிகழ்ச்சி, நல்லசெய்தி, முயற்சிபலிதம், அதிகாரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## சரணடைந்தமை தொடர்பான செய்திக்கு கருணா அணி மறுப்பு

(லண்டன்)

கருணா அணியைச் சேர்ந்த 200 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்திருப்பதாக வெளியாகியுள்ள தகவல்களில் எதுவித உண்மைகளும் இல்லை என கருணா அணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தறபோதைய கிழக்கு மாகாண நிலைவரங்கள் தொடர்பாக பி.பி.சிக்கு கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பரபரப்பை உருவாக்குவதற்காகவே இத்தகைய விசமப் பிரசாரங்கள் சிலரால் வேண்டுமென்றே பரப்பப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றே எமது அணியைச் சேர்ந்த 200 பேர் புலிகளுடன் சரணடைந்திருப்பதாக வெளியாகியுள்ள தகவலும். இதில் எந்தவித உண்மைகளும் இல்லை.

ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகளின் அணியைச சேர்ந்த 20பேரே எம்மிடம் சரணடைந்துள்ளனர்.

இதேபோல நாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள இராணுவத்தினரின் உதவியை நாடியிருப்பதாகவும் தகவ்ல்கள் வெளியாகியுள்ளன. இதிலும் எந்தவித உண்மைகளும் இல்லை. நாம் ஒருபோதும இராணுவத்தினரது உதவிகளை நாடவில்லை.

விடுதலைப்புலிகள் எம்மைத் தாக்குவார்கள் என்பதையும் அவர்களின் தரையிறக்கங்கள், தயார்ப்படுத் தலகள் என்பவற்றையும் நாம் ஏற்கனவே அறிந்திருந் தோம்.

இதனால் எமது அணி உசார் நிலையிலேயே இருந்தது. ஆனால் வலிந்து ஒரு யுத்தத்தை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,60,63)

## நோய்த்தாக்கம் குறைவு

இலங்கையில் பறவைக காய்ச்சல் நோய் பரவும் ஆபததுக் குறைந்துள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆசிய நாடுகளில் பரவி வந்த பறவைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த அந் நாடுகள் தவறிவிட்டன .இதனால் அந் நாடுகளில் இந் நோயின தாககம் அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கி-63)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு
குறள்

வலம்புரி

# அமைச்சர்களின் தலையாய பொறுப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை நேற்றைய தினம் பதவியேற்றுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் பதவியேற்றுள்ள அமைச்சர்கள் தமக்கு முன்னால் இருக்கக்கூடிய மக்கள்பணிகளை சிரமேற்கொண்டுசெயற்படுவது அவசியமானதாகும். கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது தேர்தல் பிரசாரங்களில் கூறிவந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்குக் காரணமாக இருந்தது.

நாட்டு மக்கள்ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமது அதிகப்படியான ஆதரவை வழங்கியதன் காரணமே, ஊழல் அற்ற ஓர் நீதியான ஆட்சியை வேண்டியேயாகும்.

அவ்வகையில் நேற்றையதினம் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா முன்னிலையில் பதவியேற்ற அமைச்சர்கள், மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக நடந்து கொள்ளவேண்டும். வறுமையொழிப்பு, வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களில் மிகக்கூடுதலான அக்கறை காட்டுதல், அமைச்சர்களின் தலையாய கடமையாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடின்றி எல்லாமக்களையும் இந்நாட்டின் பிரஜைகளாகக்கருதி அபிவிருத்தித் திட்டங்களை எல்லாப் பிரதேசங்களிற்கும் கிடைக்கக்கூடியவகையில் அமைச்சர்கள் செயற்படுவார்களேயானால் இந்த நாட்டில் இனப்பாகுபாடு என்ற பிரச்சினையே ஏற்பட்டிருக்கமாட்டாது. கடந்தகால ஆட்சிகளில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே நாட்டில் இனயுத்தம் வெடித்தது. வடக்குக்கிழக்கு தமிழர் தாயகத்திற்கென சர்வதேச நாடுகளால் முன்மொழியப்படும்- வழங்கப்படும் நிதி மற்றும் இயந்திர உதவிகள் திசை திருப்பப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டன. இதைவிட வடக்குக்கிழக்கிற்கென வழங்கப்பட்ட உதவிகளின் போது, ஏற்கனவே தென்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பழுதடைந்த கருவிகள், இயந்திரங்கள், போக்குவரத்து பஸ்கள் என்பவற்றை இங்குஅனுப்பி தரமான- புதியவற்றை தமது பிரதேசத்திற்கு எடுத்துக்கொண்ட மிக மோசமான நடவடிக்கைகள் கடந்தகாலங்களில் நடந்தன.

இத்தகைய கீழ்த்தரமான செயற்பாடுகள் காரணமாகவே இலங்கைத்தீவு இன்று எல்லோரதும் அனுதாபப் பார்வைக்கும், முகச்சுழிப்பிற்கும் இடமாகிப் போயுள்ளது. இத்தகைய விரும்பத்தகாத நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, அரங்கேற்றிய பெருமை சிங்கள அமைச்சர்களையே சாரும் என்பதால் எதிர்வரும் காலங்களில் இலங்கை மக்களென்ற ஒட்டுமொத்தப்பார்வையில் தமது கடமைகளையாற்ற புதிய அமைச்சர்கள் முன்வரவேண்டும்.

இதேபோல் ஐக்கிய தேசியமுன்னணியின் ஆட்சியில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதும் புதிய அமைச்சரவையின் தலையாய கடமையாகும். குறிப்பாக சம்பள அதிகரிப்பு ,நிவாரண உதவித்தொகை, போசாக்கு லத்திட்டம் போன்றவற்றில் கூடிய கவனமெடுத்து மக்களுக்கான சேவையைத் தூய்மையாக வழங்க வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியமர்வு ஆகிய விடயங்களிலும் அமைச்சர்கள் நேர்மைத்திறத்துடன் ஈடுபடுவார்களேயானால் புதிய ஆட்சியில் மக்கள் மகிழ்வுறுவது திண்ணம்.

# மட்டக்களப்பில் இடம்பெறும் சமரில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனராம்

## சுட்டிக்காட்டி யுனிசெவ் அறிக்கை

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றுள்ள கருணா தலைமையிலான போராளிகள் குழுவினருக்கும்,தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே மட்டக்களப்பில் நடைபெற்ற யுத்தத்தில் சிறுவர்களே அதிகம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக யுனிசெவ் (ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம்) சுட்டிக்காட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

18வயதுக்குக் குறைவான எவரையும் யுத்தத்தில் பயன் படுத்துவதை இரண்டு தரப்பினரும் கட்டாயமாக நிறுத்த வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக் கின்றது.

கருணா தலைமையிலான குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள்இயக்கத்திற்கும் இடையே இடம்பெற்ற யுத்தத்தில் காயமடைந்து ,வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெறவந்த இரண்டு சிறுவர்கள் உள்ளூர் தொலைக் காட்சியில் காட்டப்பட்டனர்.இந்த இரு சிறுவர்களும் 12 வயது மதிககததக்கவர்கள்.

கருணாகுழுவிற்கும்- விடுதலைப் புலிகள இயக்கத்திற்கும் இடையிலான போரில் இவ்வாறு பல சிறுவர்கள் ஈடுபட்டிருந்ததாக ஊடகவியலாளர் ஒருவரும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை,விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணா தலைமையிலான போராளிகள் குழுவிறகும் -விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடைபெற்ற போரில் சுமார் 300ற்கும் அதிகமான கருணா தரப்புப் போராளிகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரிடம் சரணடைநதுளளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பணியகம் தெரிவித்திருக்கின்றது.

அவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தினரிடம் கருணா தரப்புப் போராளிகள் சரணடைத்திருந்தால், அவாகளை உடனடியாக விடுதலை செய்து எமது (யுனிசெவ்)அமைப்பின் பராமரிப்பில் விட்டுவிடவேண்டும் என்றும் கொழும்பிலுள்ள (ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம்) யுனிசெவ் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

(உ-62,10)

# மட்டக்களப்பில் இடம் பெயர்ந்தோர் தொகை 10 ஆயிரத்தைத் தாண்டியது

(கொழும்பு)

கடந்த இரு நாட்களாக மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியிலும் வெருகல் பிரதேசத்திலும் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக 10ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் அப்பிரதேசங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 658 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்து 602 பேர் மாங்கேணிப் பாடசாலைக் கட்டடங்களில் தங்கியுள்ளனர்.ஏனைய 3ஆயிரத்து 100 குடும்பங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும்,அவர்களது உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இக் குடும்பங்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள தொண்டு நிறுவனங்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்தி தலைமையிலான குழுவினர் இம்மககளின் அடிப்படைத்தேவைகளைத் பூர்த்தி செய்து கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(தி-63)

# ஐ. தே. க. உறுப்பினர்கள் மீது அதிருப்தியாளர் குழு தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் கூரிய ஆயுதங்கள் மற்றும் கைத்துப்பாக்கிகளுடன் வாகனங்களில் பயணிப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கட்டான தேர்தல் தொகுதியின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினா டபிள்யு. குணசேகராவின் வீட்டின் மீது அண்மையில் இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவ்வேளையில் குணசேகரா வீட்டில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மீதான தாக்குதலை இனந்தெரியாத நபர்கள் சிலரை வைத்து ஜே.வி.பியினரே நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கூறி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# சமாதானப் பேச்சுவார்த்தையை புலிகளுடன் மட்டுமே நடத்த வேண்டும்

## முஸ்லிம் அமைப்புக்களின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

புதிதாகஆட்சிப்பீடம் ஏறியுள்ள அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுகளைத் தொடர்ந்தும் முனனெடுக்க வேண்டும் என வடக்கு முஸ்லிம் அமைப்புக்களின் செயலாளர் சுப்யான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசு -புலிகளுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பித்து வைத்த நோர்வே நாட்டிற்கே இச் சமாதான முன்னெடுப்புகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் தகுதி உண்டு.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது. இதனால் இனவாதக்கட்சிகள் தமது சமாதான விரோதப் போக்குகளைக் கைவிட்டு விடுதலைப்புலிகளை தனித்தரப்பாக ஏற்று அவர்களுடன் பேச அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதுவே நாட்டில நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,60,63)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இயற்கை நம் எல்லோரையும் அரைத்துக் கொண்டிருக்கிறது. உங்களுக்குக் கிடைத்த ஒரு துளி இன்பத்தை எண்ணிப்பாருங்கள். இயற்கை தன் வேலையை உங்களைக்கொண்டு முடிக்கிறது. கடைசியில் நீங்கள் இறந்ததும் செடி,கொடிகளுக்கு உரமாகின்றீர்கள் இருந்தும் இன்பத்தை நாமே சம்பாதித்ததாக நாம் எல்லோரும் நினைக்கிறோம்.

சுவாமி விவேகானந்தர்.

## தவக்கால சிந்தனை-47

இயேசுவின் உயிர்ப்பு அனைவரும் உயிர் தரும் ஊற்று. தங்களையும் கொலை செய்து விடுவார்கள் என்று அஞ்சி அறைக்குள்ளேயே கிடந்த சீடர்கள் வெற்றுக் கல்லறையைக் கண்டு நம்பிய போது மீண்டும் உயிர் பெற்றெழுந்தனர். மறுதலித்த பேதுருவின் பெயரையே முதலில் கூறி அவருக்கு மன்னிப்பு வழங்கி மகிழ்வால் அவரை நிரப்பினார். அன்று பேதுருவும் புத்துயிர் பெற்றார். மனம் தளர்ந்து கவலையால் களைப்புற்ற எம்மாவுஸ் சீடர்களின் உடன் பயணியாகச் சென்று அவாகளது இதயங்களை ஆற்றுப் படுத்தினார் உயிர்த்த இயேசு கனத்த இதயங்களின் கவலை நீங்கியதால் அவர்களும் உயிர் பெற்றனர். அன்றைய சூழலில் அவர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு உற்சாகத்தை வழங்கி அவர்களை உயிர்த்தெழ வைத்தது. விவரம் தெரிந்த நாளிலிருந்தே நாம் கொண்டாடி வரும் இந்த உயிர்ப்பு விழா நமக்கு உற்சாகத்தை தந்துள்ளதா? அவர்கள் இயேசு தங்களோடு இல்லையே என்று அங்கலாய்த்தனர். எனவே இயேசு மீண்டும் கண்ட போது அந்த அங்கலாய்ப்பு அக்களிப்பாய் மாறியது. அது போல உண்மையான மகிழ்வு, மன நிறைவு என்ற இயேசு நம்மில் இல்லையே என்று ஏங்கும்போது தான் உயிர்ப்பின் உன்னதத்தை நம்மால் நம்ப முடியும்.

காவலன்

சிங்கப்பூரின் கதை
வாலறிவு பேசுகிறது
லீ குவான் யூ



RS. 700/-

ஒரு மீளாய்வு
டாக்டர்
K.சிவம் M.V.sc.

நாடு உருவாக்க மாதிரி
யார் படிக்க வேண்டும்?~எல்லோரும்
எதிர்காலம் படைப்போர்
நாட்டுப் பற்றுடையோர்
சமூக நலன் விரும்பிகள்
வளர்ச்சிக்கு உழைப்போர்
இளைஞர்கள் யுவதிகள்
ஒவ்வொருவரும் முழு சமூகமும் படிக்க வேண்டிய முழுமைச் சிந்தனைக் கருவூலம்
நாடு உருவாக்கிய கதை

| | |
|---|---|
| அடிப்படைகள்<br>எவ்வாறு<br>அணுகுமுறை<br>நல்லரசு<br>தவிர்க்கப்பட்டவை<br>கொள்ளப்பட்டவை | படித்த பாடங்கள்<br>நண்பர்கள்<br>எதிர்காலம்<br>சமூக கோட்பாடுகள்<br>எவ்வாறு எப்படி - இரகசியம் |

Publishers
ASIAN TRADING HOUSE (PVT) LTD.
115, MESSENGER STREET,
COLOMBO 12, SRILANKA.
TEL: 2330359 FAX : + 94-11-2441915
E-mail : atrading@sri.lanka.net
(சி-110)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில புதிய பிரிவு ஆரம்பம் 11.04.2004 5.p m BY விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426, (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(8307)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்




யாழ். நகரில்
கணனிகள், கணனி
உதிரிப்பாகங்கள் மற்றும்
கணனிச் சேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே
நம்பிக்கையான நிறுவனம்

PC PARADISE
100, Clock tower Road, Jaffna.
Tel: 021-2833
E-mail: iis@sltnet.lk



(சி-111)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

அன்புக்கு அணிகலனாய், பாசத்தின் இருப்பிடமாய், பொறுமையின் பொக்கிஷமாய், சுமைதாங்கியாய் வாழ்ந்து எமது இதயத்தில் என்றும் அணையாத் தீபமாய் சுடர் வீசும், மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வம்

## அமரர் கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணிவாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, மின் பாவனையாளர் சேவை நிலையம், நகரப் பணிமனை, யாழ்ப்பாணம்)

தோற்றம் 16.03.1947

மறைவு 16.03.2004

16.03.2004 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா தனபாலசிங்கம் அவர்களின் வீட்டுக் கிரியைகள் பங்குனி மாதம் 29ம் நாள் (11.04.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இல: 14/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## இராணுவக்...

டம் சரணடைந்துள்ளதுடன், எட்டு 120 மில்லிமீற்றர் மோட்டார்கள் உள்ளிட்ட ஆயுதங்களையும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

கருணா அணியில் அவருக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த தளபதி பிரபா தற்போது கருணா அணியினர் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து போராளிகளை வழிநடத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றும் நேற்று முன்தினமும் விடுதலைப் புலிகளின் படையணிகள் வெருகல் ஆற்றுப் பிரதேசம் ஊடாகவும், பனிச்சங்கேணிக் கடற்பரப்பினூடாகவும் தரைமார்க்கமாகவும் முன்னேறி கருணாவின் பிடியில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை மீட்டபோது, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத்தொடங்கியதையடுத்து விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறை அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனிடையே, கருணா அம்மானால் தனது குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இளைஞர்கள் யுவதிகள் விடுதலைப் புலிகளிடம் சரணடைவதைத் தொடர்ந்து அவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வாகரையில் இடம்பெற்ற மோதல்களின்போது அங்கிருந்து இடம்பெயர்ந்த சுமார் 2ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மாங்கேணிப் பகுதிப் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் மீண்டும் தத்தம் சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம)

## வீணான...

இயக்கத்துடனோ அன்றிபெற்றோருடனோ இணைந்துகொள்வதற்குத் தடையாக இருப்பது மட்டுமல்ல போராளிகளை அழிப்பதற்கான செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளார். இந்நிலையில் பொதுமக்களையும் போராளிகளையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தலைமைப்பீடம் தள்ளப்பட்டுள்ளது. எனவே கருணாவைத் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்திலும் அனேக போராளிகள் எம்மிடம் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே வீணான உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கு எஞ்சியுள்ள போராளிகளை இணைந்துகொள்ளுமாறுகோருகிறோம். இதே வேளை தமிழ்த் தேசியத்திற்கான போராட்டத்தில் தமது பிள்ளைகளை மனமுவந்து இணைத்து வைத்த பெற்றோர்கள் கருணாவின் துரோகச் செயல்களுக்கு தமது பிள்ளைகளை பலியாக்கிவிடாது அவர்களை மீட்டு எடுத்துச்செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த)

## புலிகள்...

கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலமாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம)

## நிதி...

கொள்ளையரும், சமூகவிரோதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்றும் கடைகடையாகச் சென்றும் நிதி திரட்டி வருவதற்கான சான்றுகள் எமக்கு கிடைத்துள்ளன. நாம் அவ்வாறான செயலிலும் ஈடுபடவில்லை. ஏற்கனவே வாணிபர்களுடன் கதைத்து ஒழுங்கு செய்யப்பட்ட நடைமுறைகளுக்கமைவாகவே எமது பணிமனைகளில் மட்டும் நிதியைப் பெற்றுக் கொள்கின்றோம்.

எனவே, வீடுகளுக்கோ கடைகளுக்கோ வந்து எமது பெயரால் நிதி கேட்பவர்களுக்கு எவ்வித நிதியினையும் வழங்க வேண்டாமெனப் பணிவன்புடன் வேண்டுகிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ. ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாங்கெரு. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.